விக்ருதி ௵
வைகாசி ௴

ஸம்புடம் - 9
ஸஞ்சிகை - 5

685
685
2-50

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்:
P. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர், M.A., B.L., சிரோமணி.
(அட்வொகேட்)

:ப்ரசுரிக்கு மிடம்:

நெ. 2, ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம்,
சென்னை—7.

JL
Q22m211, M41
M50.9.5
189270

MAY 1950
Vol. 9 No. 5.

விஷய ஸூசிகை

		பக்கம்.
1.	தேச க்ஷேமம்	130
2.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	132
3.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	134
4.	ஹிந்து மதம்	135
5.	உபய வேதாந்த ஐககண்ட்யம்	140
6.	சீர்திருத்தம்	143
7.	உ. உ. ஸாத்விக ராக்ஷஸ நாகரிகங்களும்... ...	144
8.	ஸதண ப்ரஹ்ம நிர்ணயம்...	151
9.	செய்திகள்	156
10.	ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்	159
11.	ஸம்பாதகரின் குறிப்புகள்	161

தேவை

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸுக்கு ஒரு குமாஸ்தா தேவை

ஸம்ஸ்க்ருதத்தில் 'சிரோமணி' பட்டம் பெற்றவர்களுக்குள்ளது போன்ற ஜ்ஞானமும்; இங்கிலீஷில் கடிதப் போக்கு வரத்துகளை கவனித்துக் கொள்ளவும் கணக்குகளை எழுதவும் ஸம்ஸ்க்ருதம், தமிழ், மணிப்ரவாளம் இவைகளில் புருப் (Proof) திருத்தவும் ஸாமர்த்யம் இருக்கவேணும். மற்ற விவரங்களுக்கு ஆபீஸுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 9	விக்ருதி ஸூ வைகாசி மீ	ஸஞ்சிகை 5

"ஸுஹ்ருதாம் ப்ராணபூதாய ஶரண்யாய
ஸர்வாவஸ்தாஸ்வபி ததா ஸ்வயம் நம: ।
லக்ஷ்ம்யா ஸமாஶ்லிஷ்ட வாமாங்கம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமல்லக்ஷ்மீந்ருஸிம்ஹ கருணோதிதா ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹ கடாக்ஷேண ஜீயாதா சந்த்ர தாரகம் ॥
ந்ருஸிம்ஹ பக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

தேச க்ஷேமம்

[ஸ்ரீ உப. தேசிக தர்சந விஜயத்வஜ புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி,
ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான், ஸ்ரீரங்கம்]

'धर्मो विश्वस्य जगतः प्रतिष्ठा' என்கிற வேத வாக்யமானது, உலகம் க்ஷேமத்தோடிருப்பதற்குத் தர்மம்தான் காரணம் என்று சொல்லுகிறது.

"धर्मार्थप्रभवं चैव सुखसंयोगमक्षयम् ।
अधर्मप्रभवं चैव दुःखयोगं शरीरिणाम् ॥"

என்கிற மநு ஸ்ம்ருதி வசநமும், தர்மம் அர்த்தம் இவைகளினால் மனிதர்களுக்கு ஸ்திரமான ஸுகம் உண்டாகிறதென்றும், பாவங்களினால் தான் மனிதர்களுக்குத் துக்கமுண்டாகிறதென்றும் சொல்லுகிறது.

"धारणाद्धर्ममित्याहुः धर्मेण विधृताः प्रजाः ।
यस्माद्धारयते सर्वं त्रैलोक्यं सचराचरम् ॥"

என்கிற உத்தர ராமாயண வாக்யமும்,

"धारणाद्धर्ममित्याहुः धर्मेण विधृताः प्रजाः ।
यस्माद्धारणसंयुक्तः स धर्म इति निश्चयः ॥"

என்கிற பாரத வாக்யமும், தர்மத்தினாலேயே உலகம் க்ஷேமத்தை அடைவதாகச் சொல்லுகிறது.

"धर्म एव हतो हन्ति धर्मो रक्षति रक्षितः ।
तस्माद्धर्मो न हन्तव्यो मा नो धर्मो हतोऽवधीत्"

என்கிற மநு வசநம் 'தர்மத்தை நாம் அநுஷ்டித்தால் அது நம்மை ரக்ஷிக்கும்; நாம் தர்மத்தை அநுஷ்டிக்காமல் விட்டுவிட்டால் அது நம்மைக் கஷ்டங்களுக்கு இருப்பிடமாக்கிவிடும்; ஆகையினால் அது நம்மைக் கஷ்டப்படுத்தாமலிருப்பதற்காக நாம் ஸ்வதர்மங்களை விடக்கூடாது' என்று தர்மத்தை அவச்யம் அநுஷ்டிக்கவேணும் என்பதை அந்வயோக்தி வ்யதிரேகோக்திகளாலும் த்ருடப் படுத்துகிறது. பாரதம் சாந்தி பர்வத்தில்,

"धार्मिको यत्र भूमिपालो न तत्रास्ति पराभवः ।
उत्पाता न च दृश्यन्ते नातिवृष्टा न चानवाः ॥
ब्राह्मणाः क्षत्रिया वैश्याः शूद्राश्च धार्मिकाः ।
नानावृष्टिभयं तत्र न दुर्भिक्षं न विग्रहः ॥"

என்கிற வசநங்கள், எந்த தேசத்தில் அரசன் தர்மிஷ்டனாக இருக்கிறானோ, அந்த தேசத்தில் ஒரு மனிதனால் மற்றொருவனுக்கு அவமாநம் ஸம்பவிக்காது; அங்கு அதிக மழை பெய்வது, மழை பெய்யாமலிருப்பது, இடி விழுவது,

பெருங் காற்றடிப்பது முதலிய தைவத்தின லுண்டாகும் கஷ்டங்களும், மனிதர்களால் ஸம்பவிக்கக்கூடிய யுத்தம், நெருப்பிடுவது, முதலான கஷ்டங்களும் உண்டாகமாட்டா வென்றும், எந்தத் தேசத்தில் ப்ராஹ்மணன் முதலிய நான்கு ஜாதி ஜனங்கள் ஸ்வதர்மங்களை விடாமல் அநுஷ்டிக்கிருர்களோ அந்த இடத்தில் மழை யில்லாதன லுண்டாகக்கூடிய கஷ்டம், ஆஹார வஸ்த்ரங்களுக்குப் பஞ்சம், பைத்யம் பிடிப்பது முதலிய வ்யாதிகளும் உண்டாகா வென்றும், உலகம் கஷ்டப்படாமல் ஸுகத்துட னிருப்பதற்குத் தர்மாநுஷ்டாநத்தையே காரணமாகச் சொல்லுகின்றன.

இதை, ராமன் தார்மிகனுக இருந்ததினல் ராமராஜ்யம் கஷ்ட மென்பதே தெரியாமல் ஸுகமாக இருந்ததாக ராமாயணத்தில் விஸ்தாரமாகச் சொல்லியிருப்பதாலும், தர்மபுத்ரன் மஹா தார்மிகனுக இருந்ததினல் அவன் ராஜ்யமும் கஷ்டப்படாமல் ஸுகமாக இருந்ததாகப் பாரதத்தில் அச்வமேத பர்வத்தில் சொல்லியிருப்பதாலும், அப்படியே ராம ராஜ்யத்திலும் தர்மபுத்ரன் ராஜ்யத்திலும் நாலு வர்ணத்து மனிதர்களும் ஸ்வதர்மத்தை அநுஷ்டித்திருந்ததினுலும், அந்தந்த ராஜ்யங்கள் க்ஷேமத்தோடிருந்தனவாகச் சொல்லியிருப்பதாலும், உலக க்ஷேமத்திற்குத் தர்மமே முக்கிய காரணமென்று நம்புகிருேம்.

இக்காலத்தில் நம் தேசத்தை ஆளுகிறவர்களுக்கும் நம் தேசத்திலிருக்கும் எல்லா ஜனங்களுக்கும், நமது வேதம் முதலான சாஸ்த்ரங்களிலும் அவைகளில் சொல்லப்படும் தர்மங்களிலும் நம்பிக்கை மிகவும் குறைந்துவிட்டதினல் எல்லோரும் ஸ்வதர்மங்களை விட்டுவிட ஆரம்பித்துவிடவே, நமது தேசத்தில் எங்கும் மழை யில்லாததினல் மஹத்தான ஆஹாரக் கஷ்டமும் சில இடங்களில் அதிவ்ருஷ்டியினல் கஷ்டமும் ஸம்பவித்தது மல்லாமல்,

‘ உ–லி உசஷவ்யாயிகஞஹரே தஂ–ஹாயா ஸஂஉ–ஸீதயஃ ’

என்கிறபடியே வ்யாதி முதலிய மற்றைக் கஷ்டங்களுக்கும் இருப்பிடமாக இருக்கிருேம். இந்தக் கஷ்டங்களை மனிதர்களுடைய ஸாமர்த்யத்தினல் போக்கிக்கொள்ள முடியாததனல்,

“ ஜெவாநு ஹாவயதாநெந தெ ஜெவா ஹாவயஞு–வஃ ।
ஐஷாநு ஹொமாநு ஹி வொ ஜெவா ஊஸ்யந்தெ யஜுஹாவிதாஃ
‘ யஜாூவதி வஜ–உநூஃ ’ ‘ க்ஷிதஂ ஜாயதெவஸஷிஃ ’

என்று கீதாதிகளில் சொல்லுகிறபடியே நாம் தெய்வங்களை ஆராதித்து, அதன் மூலமாக உண்டாகும் மழை முதலிய கார்யங்களி லேயே நமது தேசத்தின் துன்பம் தொலைந்து இன்பம் பெருகி வாழவேண்டியிருப்பதால், நமது தேசத்தில் உள்ள ஸர்வ மனிதர்களுக்கும் இனிமேலாவது வேதம் முதலிய ஹிந்து மத க்ரந்தங்களில் சொல்லப்படும் ஸ்வதர்மங்களிலும் மற்றும் தேச க்ஷேமார்த்தமாகக் குறிப்பிடப்பட்ட விசேஷ தர்மங்களிலும் அதிக ச்ரத்தை உண்டாகி அநுஷ்டித்து அதன் மூலமாக தேச க்ஷேமத்தையும் தங்கள் தங்களுக்கு இஷ்டங்களான விசேஷ ஸௌக்யங்களையும் அடைவார்களென்று நம்புகிருேம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(9-ம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

இங்கே முக்யமானதொரு தாத்விக ரஸ பாகத்தைக் காட்டிவிட்டு மேலே செல்வோம். இங்கே 'க்ரஹ' பத கடிதமான ஸூத்ரம் 'ப்ரஹ்மக்ருஹீதமிவ உபாஸகம் கரோதி' என்னும் பொருள் த்வனிக்கிறது. இதற்கு, 'உபாஸகன் க்ரஹிக்கப்படும்படி உபதேசிக்கிருர்கள்' என்று ஸ்வரஸமாகப் பொருள் கூறலாம். இங்கே ஒப்புக்கொள்ளப்படும் அஹங்க்ரஹோபதேசத்திற்கு அநுகுணமாக இந்த யோஜனை மிக ஸ்வரஸம். அஹங்க்ரஹம் இந்த இடத்திலும், உதாஹரித்த ச்ருதிகளிலும் விளக்கப்படுவதாக இரண்டு மத க்ரந்தங்களிலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. உதாஹரிக்கப்பட்ட ஈசாவாஸ்ய மந்த்ரம் 17-ல் 'ஸோऽஹமஸ்மி' என்கிற வாக்யத்திற்கு 'அயம் அஹமர்த்த: அஹம் ப்ரஹ்மணா அநுஸந்தேய:' என்று ஸ்வாமி பாஷ்யம். அத்வைத க்ரந்தங்களிலும் இப்படியே அஹங்க்ரஹம் பல்கால் கூறப்படுகிறது. இந்த ஸூத்ரத்திலும் அது கூறப்பட்டுள்ளது. ஸ்ரீ மத்வ மதத்தில் இந்த ஸூத்ரத்தில் 'க்ருஹீதா' என்பதற்கு 'ஸ்வாமீ' என்று பொருள் உரைத்தாலும், 'ப்ரஹ்மம் தானே' என்று உபாஸகன் உபாஸிக்கவேண்டிய அஹங்க்ரஹம் என்னும் முறையை மற்றவிடத்தில் ஸ்பஷ்டமாய் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். 'ஸாயுஜ்யம் அஹங்க்ரஹவச:' என்று கீதையின் 2. அத். 50-ம் ச்லோகத்தில் ஸ்ரீ மத்வ பாஷ்யம்.

"யதா க்ரஹவஸ்ய பாரதந்த்ர்யம் ப்ரவிஸ்ய ஹோம: ததா உபாஸகஸ்ய ஸம்ப்ரவிஸ்ய ஹோம ஏவ ஸாயுஜ்யம் ந சைகத்வம்"

என்று அங்கு ஸ்ரீ ஜயதீர்த்தர் டீகை. 'ஸம்ஜ்ஞிதே பரம் ப்ரவிஸ்ய யதா தேவக்ரஹாதய:' என்று ஓர் வசநமும் பாஷ்யத்தில் உதாஹரிக்கப்பட்டது.

ப்ரஹ்லாதர், பகவதநுபவத்தில் முழுகின பக்தியோக நிஷ்டராயிருப்பதை வர்ணிக்கையில, ஸ்ரீ பாகவதம் 7-வது ஸ்கந்தம், 4-வது அத்யாயத்தில், 'க்ருஷ்ணக்ரஹக்ருஹீதாத்மா ந வேத ஜகதீத்ருசம்' என்று சுகர் பாடினர். க்ருஷ்ணன்என்னும் க்ரஹத்தால் ஆவேசிக்கப்பட்டு (பிடிக்கப்பட்டு) க்ருஷ்ண வசமாக்கப் பட்டுவிட்டதால் அவர் உலகத்தை நம்போல் ஜகத் ரூபமாகப் பார்க்கவேயில்லே. க்ருஷ்ண மயமாகவே ஏகாந்தமய ப்ரகாரமாகவே அநுஸந்தித்தார். ஆநந்த ப்ரஹ்மைக ப்ரகாரம் முழு சிதசித் ஜகத்து மென்றது வாஸ்தவந் தானே. ஆநந்த ப்ரஹ்மாத்மகம் என்பது ப்ரஹ்ம ஸ்வபாவ மென்பதையும் சொல்லுவது தானே. 'ஸ்வதந்த்ராவஸ்தா நந்தைக்யம் ப்ரஹ்ம ஏவ ஜகதோ வாஸ்தவாத்மகஸ்ய' என்று தத்வமுக்தாகலாபம். 'ப்ரஹ்மப்ரஹ்மணோ ஹி ப்ரஹ்மம் அத: ந ப்ரஹ்மம் அப்ரஹ்மம் ப்ரஹ்ம' என்று ஸ்ரீ சாங்கர பாஷ்யம். அது

மிக அழகே; நமக்கு முழு இஷ்டமே. பூமாதிகரண பாஷ்ய டீகைகளும் இதை அநுக்ரஹிப்பவை. ‘நாந்யத் பஶ்யதி’ என்பதற்கு, விபுல பூம ஸாக்ஷாத வ்யதிரிக்தமாக பூம வித்யா நிஷ்டன் அநுபவிப்பதால், எல்லாவற்றையும் பூமாவைப்போல நிரதிஶயாநந்தமாகவே (ததேக ப்ரகாரமாகவே) அநுபவிக்கிருன். ‘ஸர்வம் ஹ பஶ்ய: பஶ்யதி’ என்று எல்லாவற்றையும் தோன்றுவதுபோல மேலுக்குப் பார்த்தாலும் துக்கமாக (ப்ரதிகூலமாகப்) பார்ப்பதேயில்லை. இங்கே பாகவத ச்லோகத்திற்கு ‘க்ருஷ்ணக்ரஹ:—ஸ்ரீ க்ருஷ்ண ஏவ க்ரஹ:; தேந க்ருஹீத: ஆத்மா—மந: யஸ்ய; க்ரஹக்ருஹீதவத் அசேதந: உத்தித:’ என்று ஸ்ரீ வீரராகவர் உரை. ‘ஆத்மா’ என்பதற்கு ஜீவாத்ம ஸ்வரூபத்தைப் பொருளாக உரைப்பது மிக்க ரஸம். ‘விஹாய ஸர்வ தத்த்வ ஜ்ஞானம் ஸ்வாத்மாநம் அப்யநந்தம்’ என்று ஸ்ரீ பராஶரர் வர்ணித்த ப்ரஹ்லாத நிலை. ஜீவாத்ம ஸ்வரூபத்தையும் ஸர்வாத்மாவான உள்ளேயிருக்கும் அந்தர்யாமி மஹாபூதம் மிக்க த்ருஷ்ணையோடு ஆவேசித்துப் பிடித்தது; அவனைத் தன்னையே மறக்கச் செய்தது. அவனுக்குத் தான் அச்யுதனென்றே வேறில்லாத அநுபவத்தைத் தந்தது. அச்யுதனே ஆவேஶ பலத்தால் ப்ரஹ்லாதனுக்கு நழுவாது முழு அஹமானுன். ‘க்ருஷ்ணாவேஶ க்ரஹ: தேந வஶீக்ருதசேதா:’ என்று ஸ்ரீ விஜயத்வஜர். இங்கே க்ருஷ்ணனே பக்த ஜீவனுக்கு ஆவேசித்துத் தன்னைப் போலவே நினைப்பும் அநுபவமும் தரும் க்ரஹமென்று கூறினர். ஜீவன் க்ரஹம் போல் ப்ரஹ்மத்திற்குள் ஆவேசிக்கும் நாம் முன் காட்டிய முறையை இங்கே கூறவில்லை. மூல ச்லோகத்திற்கு இது ஸ்வாஸம் என்று அவர் திருவுள்ளம் போலும். ‘க்ரஹேணேவ க்ருஷ்ணேந க்ருஹீத: ஜகதீத்ருஶம் ந தயா யதா லோகா: பஶ்யந்தி’ என்று ஸ்ரீ ஜீவ கோஸ்வாமி உரை. ஸ்ரீ விச்வநாதருடைய, ‘மற்ற பக்தர்கள் தங்கள் மனதை க்ருஷ்ண விஷயமாக யோகாப்யாஸத்தால் ஆக்குவார்கள்; ப்ரஹ்லாதன் விஷயத்தில் அப்படியில்லை. ஒரு க்ரஹம் மிக்க இன்பமான ஒரு பொருளை க்ரஹித்து அநுபவிப்பதுபோல ப்ரஹ்லாதரைக் கவர்ந்து தன் வசமாக்கினர்’ என்ற வ்யாக்யாநம் அத்புத ரஸமானது.

‘வாரிக்கொண் டுன்னை விழுங்குவன் காணிலென்
ருர்வுற்ற வென்னை யொழியவென் னின்முன்னம்
பாரித்துத் தானென்னை முற்றப் பருகினன்’

என்று அவன் முந்திக்கொள்வதைக் காட்டும் ரஸமே அது. ‘சிறியவென் ளுருயிருண்ட திருவருளே’ ‘எனக்கா ராவமு தாயென தாவியை யின்னுயிரை மனக்கா ராமை மன்னியுண்டிட் டாயினி யுண்டொழியாய்’ என்று பரமபதம் செல்லும் வரையில் இந்த ரஸம் அநுவர்த்திப்பது. ‘அத்தா—(உண்பவர்)’ என்பது ‘லயம்’ என்னும் அவிபாக ஸூசகம். நித்ரையிலும் பரமாத்மாவினிடம் ‘அப்யய’ மென்னும் லயம். அங்கும் தன் நினைப்பில்லை. யோக ஸமாதியிலும் அப்படியே. ‘ஶைத்யாத்ருஶ்யந்தி ஹம்ஸாயதிவஹ்நி:’ என்ற ஹம்ஸஸந்தேஶ ச்லோகத்தில், ‘ஸாக்ஷாத்க்ருத்ய ஸ்வம் ஆத்மாநம் ராமமேவாநுபஶ்யதி’ என்று ஸீதையின் ராமத்யாந ஸமாதி நிலையை வர்ணித்தார். அதில் வ்யாக்யாநத்தில் ஸ்ரீமத் பரகால ஸ்வாமியாலும், ஸ்ரீ பண்டித ரத்நம் கஸ்தூரி ரங்காசார்ய

ஸ்வாமியாலும், அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியாகிய நிர்விகல்ப ஸமாதியில் த்யேய மாத்ர நிர்ஹாஸ மூண்டேயொழிய த்யாந த்யாத்ரு த்யேய பேத மென்னும் த்ருபுடீ ஸ்புரணம் கிடையாதென்று பாக்க நிரூபிக்கப்பட்டது. ஸ்ரீ விஷ்ணு புராணத்தில்,

“ தஸ்யைவ கல்பநாஹீநம் ஸ்வரூபக்ரஹணம் ஹி யத் ।
மநஸா த்யாநநிஷ்பாத்யம் ஸமாதி꞉ ஸோऽபிதீயதே ॥ ”

என்ற ச்லோகத்தை உதாஹரித்து, “விவித꞉ கல்ப꞉ விகல்ப꞉, நிர்கதோ விகல்பாத் நிர்விகல்ப꞉, நாவஸ்தாந்தரஸஹ்யம் உக்தம்” என்று பகவான் கொண்டாடிய வ்யாஸ முநிக்குப் பாகவதாரம்பத்தில் நாரதர் காட்டிய ஸமாதி நிலே. “யேநயயேநா நயாதூரேயே யேநயஸ்த்ருஷ்டிமீரணா ஸமாதி꞉’ என்று அங்கே ஸாதித்த ஸமாதி லக்ஷணம் (பக்கம் 465) ப்ரளயத்திலும் அவிபாகம் என்னும் லயம்; முக்தியிலும் அவிபாகம் எனும் பரமாத்மாவில் முக்த ஸ்வரூபத்தின் லயம். ச்வேதாச்வதரத்தில் ‘ஸ நோ புத்த்யா ஶுபயா ஸம்யுநக்து’ என்று முக்தி லய ப்ரார்த்தனே. ‘உக்தவத் ப்ரஹ்மண்யவ்யயோ நாஶ꞉ ஸைஷகாரணாத்ஸம்யோஜநம்’ என்று உபநிஷத் பாஷ்யம். இந்த பக்தி யோகத்தில் பரமாத்மா என்னும் ஆத்மாவின் ஸ்புரணமே ப்ரசுரம். அவர் ப்ரீத்யாவேஶத்தாலும் அது ஸித்திக்கும். தன் தனி நினைப்பு இராது. ஸூத்ரகாரரும் அப்படி ப்ரஹ்ம மெனும் க்ரஹத்தால் க்ருஹீதராகவேண்டு மென்பதையும் ‘ஸம்ராதயதி’ என்று த்வநியினுல் காட்டுகிருர். [தொடரும்]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விக்ருதி ஸூ ஆனி மீ [1950 ஸூ ஜூன் - ஜூலை மீ]

[உத்தராயணம், க்ரீஷ்ம ருது, மிதுந மீ.]

15—6—50	1உ	வியாழக்கிழமை	...	ஷடசீதி; சூந்ய திதி; ஸர்வ அமாவாஸ்யை*
16—6—50	2உ	வெள்ளிக்கிழமை	...	சூந்ய திதி
17—6—50	3உ	சனிக்கிழமை	...	மிதுந சுக்ல த்விதீயை திதி
24—6—50	10உ	சனிக்கிழமை	...	மிதுந சுக்ல நவமி திதி
25—6—50	11உ	ஞாயிற்றுக்கிழமை	...	மிதுந சுக்ல தசமி – ஏகாதசி திதி த்வயம்; ஸ்ரீ பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்
26—6—50	12உ	திங்கட்கிழமை	...	மிதுந சுக்ல த்வாதசி திதி; ஸர்வ ஏகாதசி வ்ரதம்
27—6—50	13உ	செவ்வாய்க்கிழமை	...	ஸ்ரீமந் நாதமுனிகள் திருநக்ஷத்ரம்
11—7—50	27உ	செவ்வாய்க்கிழமை	...	ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி
14—7—50	30உ	வெள்ளிக்கிழமை	...	அமாவாஸ்யை திதி; ஸர்வ அமாவாஸ்யை
15—7—50	31உ	சனிக்கிழமை	...	மிதுந சுக்ல ப்ரதமை திதி

* இன்று செய்யவேண்டிய தர்ப்பண விஷயமான விபரத்திற்கு, சென்ற சித்திரை மீ. பஞ்சாங்க ஸங்க்ரஹத்தைப் பார்க்கவும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஹிந்து மதம்

[ராம ராஜ்யம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உ.ப. தேசிக தர்சந விஜயத்வஜ புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி,
ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான், ஸ்ரீரங்கம்]

ஸ்ரீ வால்மீகி மஹர்ஷி ராமாயணத்தில் ராமனுடைய ராஜ்ய மிருந்த படியைப் பின்வருமாறு எழுதியிருக்கிறார். அதாவது:—ராமனுடைய ராஜ்ய காலத்தில் ஸ்த்ரீகள் பர்த்தா இறந்துபோய் வ்யஸநப்படவில்லை. ப்ராணிக ளுக்குப் புலி பாம்பு முதலிய துஷ்ட ஜந்துக்களினாலும் வ்யாதியினாலும் பய முண்டாகவில்லை. திருடர்கள் ராம ராஜ்யத்தி லில்லை. மனிதர்களுக்குப் பந்து வியோகம் முதலிய வேறு கஷ்டங்களு முண்டாகவில்லை. பெரியோர்க ளிருக்கையில் சிறுவர்கள் இறந்து போகவில்லை. எல்லா ப்ராணிகளும் ஸந்தோஷத்தோ டிருந்தன. எல்லா மனிதர்களும் தர்மத்தையே முக்ய மாக அநுஷ்டித்தார்கள். ராமனுடைய் அநுஷ்டாநத்தையே ஜநங்களும் அநுஷ் டித்ததினால் ஒருவரை மற்றவர் ஹிம்ஸிக்கவேயில்லை. எல்லா மனிதர்களும் புத்ரன் பேரன் முதலிய எல்லா பந்துக்களுடன் வ்யாதி துக்கம் முதலியன இல் லாமல் நெடுங்காலம் ஜீவித்திருந்தார்கள். மரங்கள்கூட அதிக நிழலைக் கொடுக் கக்கூடிய நிறைந்த கிளைகளோடும் ஸர்வ காலங்களிலும் புஷ்பங்களோடும் பழங்களோடு மிருந்தன. வேண்டிய காலங்களி லெல்லாம் மழை பெய்து கொண்டிருந்தது. எப்பொழுதும் அநுகூலமான மந்தமாருதமே வீசிக்கொண் டிருந்த்து, ராஜ்யத்தில் ஸர்வ ஜநங்களும் ராம குணங்களைப்பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். உலகம் முழுவதும் ராமமயமாகவே இருந்தது.

ஸ்ரீ பாகவதம் 9-ம் ஸ்கந்தம், 10-ம் அத்யாயத்தில் ஸ்ரீ சுகப்ரம்ஹர்ஷியும் ராம ராஜ்யத்தைப்பற்றி, ஸர்வ ப்ராணிகளுக்கும் ஸுகத்தை உண்டுபண்ணின ராமன் அரசனாக இருந்த காலத்தில், 'த்ரேதாயுகம் என்கிற காலம் க்ருதயுகம் போலிருந்தது. காடுகள் ஆறுகள் மலைகள் மழைகள் ஜலம் சூழ்ந்த பூமிகள் ஸமுத்ரங்கள் ஆகிய எல்லாம் எல்லா, ஜநங்களுக்கும் இஷ்டங்களான வஸ்துக் களையே கொடுத்துக்கொண் டிருந்தன. ராமன் அரசனாக இருந்த ஸமயத்தில் மனிதர்களுக்கு மனத்தில் கவலை வ்யாதிகள் கிழத்தனம் பசி தாஹம் துக்கம் அதன் பிரிவுகள் பயம் ச்ரமம், இவைகள் உண்டாகவில்லை. ஜீவித்திருக்க ஆசை யுள்ள மனிதர்களுக்கு மரண முண்டாகவில்லை' என்று எழுதியிருக்கிறார். மஹாபாரதத்திலும், மற்றும் எல்லாப் புராணங்களிலும், பற்பல மஹர்ஷிகளி னால் ராம ராஜ்ய மிப்படியே இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

ராஜராஜ்ய மிப்படி இருந்ததற்குக் காரண மென்ன வென்று புத்திமான்கள் விசாரிக்கவேண்டும். ‘அஜ்ஞோ ஜந்துரநீஶோயமாத்மந: ஸுகது:கயோ:’ என்கிறபடியே மனிதன் தன்னுடைய ஸாமர்த்தியத்தினுல் தன்னுடைய துன்பங்களைப் போக்கிக்கொள்ளவோ தனக்கு வேண்டிய இன்பங்களை வரவழைத்துக்கொள்ளவோ முடியா தென்பது ப்ரத்யக்ஷ ஸித்தம். மனிதர்களுக்கு அப்படிப்பட்ட ஶக்தி இருந்தால் ‘நஹி ப்ரியம் ந ஜீவிதம்’ என்கிறபடியே எவனுவது இறந்து போவனு? கிழவனுகப் போவனு? புத்ரன் பத்நீ முதலியவர்கள் இறந்துபோகப் பார்த்திருப்பனு? பசி தாஹம் வ்யாதிகளையும் அமேத்ய மூத்ரமயமான தேஹத்தையும் பொறுத்திருப்பனு? இருக்கமாட்டான். ஆகையினுல் ராமராஜ்யம் கஷ்டமே யில்லாமல் ஸுகத்தோ டிருந்ததற்குக் காரணம், அந்த ராஜ்யத்திலிருந்த ஜனங்களுடைய ஸாமர்த்யம் என்று சொல்வது உசிதமாகாது.

ராமன் ஸர்வேச்வர னுகையினுல் அவனுடைய ஶக்தியினுல் ராமராஜ்யம் அவ்வாறு இருந்த தென்று சொல்லக்கூடாதா என்று சிலர் நினைக்கலாம். அது ஸரியல்ல. ஏனென்றுல்:—ராமனிடம் ஈச்வரத்தன்மை பூர்ணமாக இருந்தாலும், அதை ராமன் அந்த ஸமயத்தில் பெரும்பாலும் உபயோகப்படுத்தாமல் மனித ஸ்வபாவத்தோடேயே இருந்தான் என்பது, அவனை ஸர்வேச்வரனுகச் சொன்ன ப்ரஹ்மாவிடத்திலும்கூட ‘ஆத்மாநம் மாநுஷம் மந்யே’ என்கிற அவன் வாக்யத்தினுலும் ஸித்தம். இறந்துபோன குரங்குகளைப் பிழைக்கும்படி செய்ததும், அயோத்யா வாஸிகளுக்கு ஸந்தாந லோகம் கொடுத்ததும், இந்த்ரன் ப்ரஹ்மாவிடம் அப்படி வரதாநம் வாங்கிச் செய்ததனுலும் இது ப்ரஸித்தம். இது நிற்க: ஈச்வர னல்லாத தர்மபுத்ரனுடைய ராஜ்யமும் ராம ராஜ்யம்போலவே துன்ப வாஸனையே இல்லாது பேரின்பத்தோ டிருந்ததாகப் பாரதத்தில் ஆச்வமேதிக பர்வத்தில் வ்யக்தமாக வ்யாஸ பகவானுல் சொல்லப்பட்டிருப்பதால், அதற்கு என்ன காரணம் சொல்வதென்று ஆராய்ந்து பார்த்தால் ஹிந்துமத ஶாஸ்த்ரங்களைத்தான் நம்ப வேண்டியதாக முடிகிறது.

நமது ஹிந்து மத ஶாஸ்த்ரங்க ளெல்லாம் தர்மமே உலக க்ஷேமத்திற்குக் காரணமென்று சொல்லுகின்றன. ஸர்வ ப்ராணிகளும் ஸுகமாக ஜீவித்திருப்பதற்குக் காரணம் தர்மந்தான் என்று ‘தர்மோ விஶ்வஸ்ய ஜகத: ப்ரதிஷ்டா’ என்னும் வேத வாக்யம் சொல்லுகிறது. தர்மங்களினுலும் தர்மத்தை அநுஸரித்த பணங்களினுலும் சாச்வதமான ஸுக முண்டாகிறதென்று ‘யஜ்ஞாய ச ப்ரஹ்மவர்ச்ச ஸுகமவ்யய மக்ஷயம்’ என்பதால் மனு சொல்லுகிறுர். ‘தைவகர்மணி யுக்தோ ஹி பிபர்தீதம் சராசரம்’ [மநு] தேவர்களுடைய ஆராதநத்தைச் செய்கிற மனிதன் ஸ்தாவர ஜங்கம ரூபங்களான இவ்வுலகத்தை ரக்ஷிக்கிறுன். அது எப்படி என்றுல்:—

“ அக்நௌ ப்ராஸ்தாஹுதி: ஸம்யகாதித்யமுபதிஷ்டதே।”
ஆதித்யாஜ்ஜாயதே வ்ருஷ்டி: வ்ருஷ்டேரந்நம் தத: ப்ரஜா:॥ ”

ஶாஸ்த்ரங்களில் சொல்லப்படுகிற பக்தி ச்ரத்தை மந்த்ரோச்சாரணம் முதலியவைகளோடு மனிதனுல் அக்நியில் ஹோமம் செய்யப்பட்ட நெய் முதலிய

த்ரவ்யங்கள் ஸூர்யன் முதலிய தேவர்களுக்கு அம்ருத மயமான ஸம்பூர்ண மான ஆஹாரமாகப் பரிணமித்து, தேவர்களுக்கு ஸந்தோஷத்தை உண்டு பண்ணுகிறது. அதனல் ஸந்தோஷ மடைந்த ஸூர்யன் முதலிய தேவர்கள் இவ்வுலகத்தின் க்ஷேமார்த்தமாக மழை பெய்யும்படி செய்கிருர்கள். அந்த மழையினல் இவ்வுலகத்தில் ஸர்வ ப்ராணிகளுக்கும் ஆஹார முண்டாகிறது. ஆஹாரத்தினல் ப்ராணிகள் ஸுகமாக ஜீவித்திருக்கிருர்கள்.

இந்த விஷயம் பகவத்கீதையில் 3-வது அத்யாயத்தில் '𑌸𑌹𑌯𑌜𑍍𑌞𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾' என்று ஆரம்பித்து, மனிதர்களை ஸ்ருஷ்டித்த ஈச்வரன் அப்பொழுதே தேவதைகளுடைய ஆராதநமான தர்மங்களையும் ஸ்ருஷ்டித்து, மனிதர்களைப் பார்த்து, 'நீங்கள் இந்த தர்மங்களினல் தேவதைகளை ஆராதியுங்கள்; உங்களால் பூஜிக்கப்பட்ட தேவர்கள் உங்களுக்கு இஷ்டங்களான போகங்களை யெல்லாம் கொடுப்பார்கள்' என்றும்,

"𑌅𑌨𑍍𑌨𑌾𑌦𑍍𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌾𑌦𑌨𑍍𑌨𑌸𑌂𑌭𑌵𑌃 ।
𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑍍𑌭𑌵𑌤𑌿 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌃 𑌯𑌜𑍍𑌞𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 ॥"

என்று ஸர்வ ப்ராணிகளும் ஆஹாரத்தினல் ஜீவித்திருக்கின்றன; ஆஹாரமானது மேகங்கள் பெய்கிற மழையின லுண்டாகிறது; அந்த மழையானது தேவதைகளினுடைய ஆராதநமான தர்மாநுஷ்டாநத்தின லுண்டாகிறது; அந்த தர்மங்கள் மநுஷ்ய ஶரீரத்தினல் செய்யப்படவேண்டியவைகள்; ஶரீரேந்த்ரியங்கள் ஆத்மாவினுடைய ப்ரயத்நத்தினல் தர்மங்களைச் செய்கின்றன; ஆகையினல் எல்லா மனிதர்களுடைய ஶரீரங்களும் இந்த்ரியங்களும் எப்பொழுதும் தர்மாநுஷ்டாநத்துக்காகவே உண்டாக்கப்பட்டன. இப்படி தேவதைகளுடைய ஆராதநத்திற்காக ஈச்வரனல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட தன் ஶரீரத்தை எந்த மனிதன் தர்மாநுஷ்டாநத்தில் உபயோகப்படுத்தாமல், சிற்றின்பங்களை அநுபவிப்பதிலும், அதற்காகப் பாப கார்யங்களிலும் உபயோகப்படுத்துகிருனே, அவன் வீணுக ஜீவித்திருக்கிருனென்று கீதாசார்யனை பகவான் அருளிச் செய்தான். சிற்றின்ப ஸுகங்களும் ப்ரஜா வ்ருத்தியும், ஆடு மாடு முதலிய திர்யக்குக்களுக்கு முண்டு. ஆகையினல் அவை மநுஷ்ய ஜந்மத்திற்கு அஸாதாரண ப்ரயோஜநமாகமாட்டா. தர்மாநுஷ்டாநமானது மநுஷ்ய தேஹத்தினல்தான் செய்யப்படவேண்டும் ஆகவே அந்த தர்மங்களைச் செய்யாத மநுஷ்ய ஜந்மம் பயனற்றதாகிறது.

ஆகவே, இங்கு சொல்லப்பட்ட ச்ருதி மநுஸ்ம்ருதி பகவத்கீதை வசநங்களினல், மனிதனல் அநுஷ்டிக்கப்படுகிற தர்மாநுஷ்டாநமானது, தர்மங்களை அநுஷ்டிக்கிறவனுக்குப் பரலோகத்தில் பேரின்பங்களைக் கொடுப்பதோடு இவ்வுலகத்தில் அவன் வஸிக்குமிடத்தில் வேண்டிய மழை பெய்வதாலும் பஞ்சம் வ்யாதி கலஹம் அகால மரணம் முதலிய கஷ்டங்கள் வாராதபடி செய்து, ஸர்வ ப்ராணிகளுக்கும் ஸுகத்தை அளிப்பதற்கும் காரணமாகிற தென்று சொல்லப்பட்டது.

இந்த விஷயத்தை மஹாபாரதம் சாந்தி பர்வம் 77-வது அத்யாயத்தில், ஸ்ரீவ்யாஸ பகவான்

“ ஸாமிஷூகெர யத்ரு ஹூவாநொ நதத்ராஷ்டி வாஸவ: ।
உக்லவாதா நவா ஷ்ரூஸ்யதெ நதிவ்யா ந ச ஊ நிஷ்ஷர: ॥
“ ஸ்ராஹ்மணா: க்ஷத்ரியா வைஶ்யா: யத்ர ஶூத்ராஶ்யாமி ஷூகா ।
நாநாவ்யஷிஹயம் தத்ர நதுவ்யாஸிக்ஷம் நவிஹஸ: ”

என்கிற ச்லோகங்களினால், எந்தத்தேசத்தில் அரசனும் நான்கு வர்ணத்து ஜனங்களும் தர்மங்களை அநுஷ்டிக்கிறார்களோ, அவ்விடத்தில் மழை இல்லாமை பஞ்சம் வ்யாதி மற்றும் ஒருவித துன்பங்களும் உண்டாகமாட்டா; உத்பாதங்களு முண்டாகா என்று வ்யக்தமாக அருளிச்செய்தார். இதற்குத் தர்மபுத்ரனை உதாஹரண மாக்கிக்கொள்ள வேணும். பாண்டவர்கள் அஜ்ஞாத வாஸத்தில், துர்யோதனன் பீஷ்மரைக்குறித்துப் பாண்டவர்க ளிருக்கிற இடம் தெரியுமா வென்று கேட்டதற்குப் பீஷ்மர், ‘அவர்கள் வஸிக்கிற இடம் தெரியாது; ஆனால் தர்மபுத்ர னிருக்கு மிடத்திற்குச் சில அடையாளங்கள் சொல்லுகிறேன்; அந்த லக்ஷணங்களைக்கொண்டு அவர் இருக்குமிடம் தெரிந்துகொள்ளலாம் என்று சொல்லிவிட்டு,

“ ஸதா ச தத்ர பர்ஜந்ய: ஸம்யக்வர்ஷீ ந ஸம்ஶய: ।
ஸம்பந்நஸஸ்யா ச மஹீ பவிஷ்யதி நிராமயா ॥ ”

தர்மபுத்ர னிருக்குமிடத்தில் எப்பொழுதும் மழை அநுகூலமாகப் பெய்யும்; பூமியில் பயிர்கள் நிறைந்திருக்கும்; அவ்விடத்தில் வ்யாதி உண்டாகாது’ என்று சொன்னார். இதனால், ராஜ்யத்தில் கஷ்ட முண்டாகாமல் ஸுக முண்டாகி யிருப்பதற்குக் காரணம் தர்மம்தான் என்பது வ்யக்தமாக ஆகிறது. ஆகவே, ராம ராஜ்யம் துன்பமின்றி ஸந்தோஷமாக இருந்ததற்குத் தர்மம்தான் காரண மென்று தீர்மானிக்கப்படுகிறது.

இக்காலத்தில் தேவலோகத்தில் ஆனந்தக்கடலில் அமிழ்ந்திருக்கிற தேவதைகளும், பாரத புண்ய பூமியில் பிறக்கும்படியான பாக்யம் நமக்கு ஸம்பவிக்குமா என்று ஆசைப்படுகிற நமது தேசத்தில் ஹிந்து மதத்தில் பிறந்து வளர்ந்திருக்கும் சில புத்திமான்கள், ‘நம் தேச க்ஷேமத்திற்குக் காரணத்தைத் தெரிவிக்கிற ஹிந்துமத க்ரந்தங்களில் எனக்கு நம்பிக்கை யில்லை’ என்று சொல்வதுபோன்ற சில வார்த்தைகளைச் சொன்ன ஜாபாலியைக் குறித்து,

“ நிந்தாம்யஹம் கர்ம பிது: க்ருதம் தத் யஸ்த்வாமக்ருஹ்ணாத் விஷமஸ்தபுத்திம் ।
புத்த்யாநயைவம்விதயா சரந்தம் ஸுநாஸ்திகம் தர்மபதாதபேதம் ॥ ”

‘என்னுடைய தகப்பனார் எனக்கு ராஜ்யம் கொடுக்காததைக் குறித்தாவது என்னைக் காட்டுக்கு அனுப்பினதைக் குறித்தாவது நான் அவரைத் தூஷிக்கவில்லை. நமது மத க்ரந்தங்களில் நம்பிக்கையில்லாததனால் மஹாநாஸ்திகனாய்த் தர்மமார்க்கத்தை விட்டவனாய், அதர்ம மார்க்கத்தி லிருக்கிறவனான உன்னை மந்த்ரியாக வைத்துக்கொண்ட கார்யத்தை மாத்ரம் எப்பொழுதும் நிந்திக்கிறேன்’ என்று, ‘பித்ருதேவோ பவ’ என்று பரதேவதையாகப் பூஜிக்கும்படி சொல்லப்பட்ட

பிதாவை நேரே தூஷிக்க இஷ்டமில்லாமலும், ‘ 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌯 𑌨𑌾𑌵𑌮𑌨𑍍𑌯𑍇𑌤 ’ என்று நிஷேதித்த ப்ராம்ஹண நிந்தையையும் நேரே செய்ய இஷ்டமில்லாமலும், ‘என் தகப்பனர் உன்னை மந்த்ரியாக வைத்துக்கொண்ட காரியத்தை நிந்திக்கிறேன்,’ என்றும், வயோதிகனன ப்ராஹ்மணனைப் பார்த்து ‘நாஸ்திகனை உன் முகத்தில் விழிக்கமாட்டேன்’ என்று நேரே சொல்ல இஷ்டமில்லாமல் ‘ 𑌯𑌥𑌾 𑌹𑌿 𑌚𑍋𑌰𑌃 𑌸 𑌤𑌥𑌾 𑌹𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌃 ’ என்ற அடுத்த ச்லோகத்தில், ‘ 𑌨 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑍇𑌨𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍋 𑌭𑌵𑍇𑌦𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌕𑌃 ’ (பண்டிதன் நாஸ்திகன் முகத்தில் விழிக்கக்கூடாது) என்று ஶாஸ்த்ரங்களில் நம்பிக்கையில்லாதவனைத் தூஷிப்பதாலும், ஸ்ரீராமனுக்கு ஹிந்துமத க்ரந்தங்களான வேதங்களிலும், அவற்றை அநுஸரித்த மநு ஸ்ம்ருதி முதலான ஶாஸ்த்ரங்களிலும் பூர்ணமான நம்பிக்கையிருப்பதாக நன்ருகத் தெரிகிறது. மேலும், ராமன் வாலியைப் பார்த்து அவன் கேள்விக்குப் பதில் சொல்லுமிடத்தில்,

“ 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇 𑌮𑌨𑍁𑌨𑌾 𑌗𑍀𑌤𑍌 𑌶𑍍𑌲𑍋𑌕𑍌 𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑌵𑌤𑍍𑌸𑌲𑍌 ।
𑌗𑍃𑌹𑍀𑌤𑍌 𑌧𑌰𑍍𑌮𑌕𑍁𑌶𑌲𑍈𑌸𑍍𑌤𑌥𑌾 𑌚𑌰𑌿𑌤𑌂 𑌹𑌰𑍇 ॥”

என்கிற ச்லோகத்தினல், ‘மநு ப்ரஜாபதியானவர் உலகம் நல்ல ஸ்திதியிலிருக்க வேணுமென்கிற ஆஸையினல் மநு ஸ்ம்ருதியில் இரண்டு ச்லோகங்களைச் சொல்லியிருக்கிருர். தார்மிகர்களால் அந்த ச்லோகத்தின்படி தர்மங்கள் அநுஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. நானும் அந்த மநுவினுடைய ச்லோகத்தை அநுஸரித்து உன்னை அடித்தேன்’ என்று சொல்லி, மநு ஸ்ம்ருதி 8-ம் அத்யாயத்திலிருக்கிற ‘𑌰𑌾𑌜𑌭𑌿𑌰𑍍𑌧𑍃𑌤𑌦𑌣𑍍𑌡𑌾𑌸𑍍𑌤𑍁’ ‘𑌶𑌾𑌸𑌨𑌾𑌦𑍍𑌵𑌾 𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌵𑌾’ என்கிற ச்லோகங்களைச் சொன்னதாக வால்மீகி ராமாயணத்திலிருப்பதால், ராமன் ஹிந்து லா என்று சொல்லப்படுகிற மநு ஸம்ருதியின்படி ராஜ்யத்தைப் பாலநம் செய்ததாகத் தெரிகிறதாகையாலும், ‘𑌰𑌾𑌮𑍋 𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌵𑌾𑌨𑍍 𑌧𑌰𑍍𑌮𑌃’, ‘𑌸𑌾𑌧𑍁𑌃 𑌸𑌤𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌃’ என்கிறபடியே தர்ம தத்வமே ராம ரூபியாகப் பிறந்திருக்கிறதென்று சொல்லும்படியும், ‘𑌰𑌾𑌘𑌵𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌸𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾’ என்று தர்மத்திலேயே மநஸ்ஸுடையவனன ராமன்

“ 𑌨𑌾𑌹𑌮𑌰𑍍𑌥𑌪𑌰𑍋 𑌦𑍇𑌵𑌿 𑌲𑍋𑌕𑌮𑌾𑌵𑌸𑍍𑌤𑍁𑌮𑍁𑌤𑍍𑌸𑌹𑍇 ।
𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑌾𑌮𑍃𑌷𑌿𑌭𑌿𑌸𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌂 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌧𑌰𑍍𑌮𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ॥” என்றும்,
“ 𑌰𑌾𑌘𑌵𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌸𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑍍𑌰𑌾𑌵𑍍𑌯 𑌰𑌾𑌜𑍍𑌯𑍇 𑌨𑌰𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌸𑌂𑌜𑍇 𑌬𑌹𑍁𑌵𑌿𑌧𑍇𑌯𑍇𑌭𑍍𑌯𑍋 𑌜𑍇𑌷𑍍𑌠𑌃 ”

என்கிறபடியே தர்மங்களையே அநுஷ்டிக்கும் ஸ்வபாவ முடையவனய் இருந்ததோடு,

“ 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌸𑍍𑌤𑍁 𑌵𑌾 𑌆𑌰𑍍𑌯 𑌰𑌾𑌜𑍋 𑌸𑌤𑍍𑌯𑌯𑌾 𑌗𑌿𑌰𑌾 ।
𑌲𑌙𑍍𑌕𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 𑌸𑍈𑌨𑍍𑌯𑍇𑌨 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌂 𑌸𑌤𑍋 𑌮𑌮 ॥
𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌸𑍍𑌵𑌵𑍀𑌕𑍇 𑌨 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌤𑍇 𑌮𑌮 𑌶𑌾𑌸𑌨𑌾𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌜𑌾𑌸𑌂𑌰𑌕𑍍𑌷 𑌸𑍈𑌨𑍍𑌯𑍇𑌨 𑌨𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥
𑌮𑌾 𑌅𑌭𑍍𑌯𑌸𑍂𑌯𑌸𑍇 𑌮𑍁𑌖𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾 𑌰𑌾𑌜𑌾𑌨𑍁𑌕𑌾𑌯𑌂 𑌅𑌨 । ”

என்று 'ஸர்வாவஸ்தாகதஸ்யாபி யஸ்ய தே உசிதா மதி:' என்று ப்ரஹ்ம தேவனிடத்தில் வரம் வாங்கின விபீஷணனைக்குறித்து ஆணையிட்டுத் தர்மத்துடன் ராஜ்யத்தை ரக்ஷிக்கும்படி நியமிக்கையாலும், ராமராஜ்யத்து ஜநங்களும்,

"ஸுவஸ்து ப்ரஜா யதோக்தா: ஸாதே ஸாவஸதி நாந்யதா: ।
ஸர்வே நராஸ்ச நார்யஸ்ச ஸர்வே ஸீலஸுஸம்யதா: ॥"

என்கிறபடியே தர்மத்திலேயே நிலைபெற்றிருந்ததாலும், ராமராஜ்யம் கடுகளவு கஷ்டமில்லாது பேரின்ப ப்ரவாஹம் வளர்ந்து வாழ்ந்திருந்ததென்று நிச்சயிப்பதுதான் உசிதமாகும்.

ஆக, இதனால் அப்படிப் பேரின்பம் பெருகியிருந்த ராமராஜ்யமான இந்தப் பாரத புண்ய பூமியில், இக்காலத்தில் ஹிந்து மத க்ரந்தங்களில் நம்பிக்கையில்லாததினால் ஸர்வ தர்மங்களையும் விட்டிருப்பதால், ஸுகலேஸ வாஸனையே இல்லாது எண்ணிறந்த துன்பங்களை அநுபவிக்கிற ஹிந்துக்களான நாம், இனிமேலாவது நமது தர்மங்களைச் சொல்லுகிற சாஸ்த்ரங்களில் நம்பிக்கையோடு நமது தர்மங்களை அநுஷ்டித்து, அந்தத் தர்ம மஹிமையினால் நமது தேசம் ஸர்வ துக்கங்களும் தொலைந்து பேரின்பம் பெருகி வாழ்ந்திருக்கும்படி ப்ரயத்நப்படுவதே உசிதமாகும்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

உபய வேதாந்த ஜககண்ட்யம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

'பொறியுணர் வவை' என்பது அந்நமயம் முதலான நான்கையும் (அதாவது: அந்நமய ப்ராணமய மநோமய விஜ்ஞாநமயங்களைக்) குறிக்கிறது. 'அந்நமயன் முதலிய' என்று அர்த்தம். 'ஆதி' என்று பொருள். அவை என்னும் பஹுவசநம் இக்கருத்துக்கு நன்கு பொருந்தும்.

'இனன்' என்பதற்கு 'இவன்' (ஏஷ:) என்பது பொருள். 'ஏஷ ஏவ ஸாரீர ஆத்மா' என்று திரும்பவும் திரும்பவும் ப்ராணமயனுக்குப் பிறகும், மநோமயத்திற்குப் பிறகும், விஜ்ஞாநமயத்திற்குப் பிறகும் ச்ருதியில் படிக்கப்பட்டுள்ளதை 'ஏஷ:' என்னும் பொருளுடைய 'இனன்' சப்தத்தால் ஸூசிக்கிறார். அதற்கு முன் பதமான 'அவை இலன்' என்பதால் அந்நமயனைக் காட்டிலும், ப்ராணமயனைக்காட்டிலும், மநோமயனைக் காட்டிலும் 'அந்யோந்தர

ஆத்மா, அந்தராத்மா ஆத்மா' என்று திரும்பவும் திரும்பவும் படிக்கப்பட்டிருக்கும் அந்நமயாதிகளல்லாதவன் என்னும் ச்ருதி வாக்யங்களை ஸூசிக்கிறார். முன் வாக்யங்கள் ஒவ்வொன்றிலும் 'தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா' என்று சொல்லப்பட்ட ஆத்மா ஆநந்தமய பரமாத்மாவே என்பதையும் இங்கே நன்கு விளக்குகிறார். 'இனன்' என்று அநுவாதம் செய்யப்பட்ட சாரீரனான ஆத்மாவே 'முழுநலம்' என்று கூறப்படுவதால், ஆநந்தமயன் என்கிற பதத்தில் 'மயம்' என்று சொல்லியிருப்பதால், அல்ப துக்கமும் கலந்திருப்பதையும் ஸூசிப்பதாகக் கட்சி சொல்லி 'ஆநந்தமயன் ஜீவனே; ப்ரஹ்மமல்ல; ஆநந்தமயனைக் காட்டிலும் வேறான புச்சமென்று சொல்லப்படுமதே ப்ரஹ்மம்' என்கிற சங்கையைத் தவிர்க்கிறார். 'ஆநந்தமயன்' என்பதற்கு 'முழுவதும் ஆநந்தபூர்ணன்; துக்கலேசமுமில்லாதவன்' என்றுதான் பொருள் என்பதை முழு ஆநந்தமென்பதால் விளக்குகிறார். 'ஆநந்தமயோऽப்யாஸாத்' என்கிற இந்த அதிகரண ஸூத்ரத்தில் 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம்' என்று மந்த்ர வர்ணத்தில் முழு ஜ்ஞாநமாக (முழுவுணர்) என்று முதலில் அறுதியிடப்பட்ட ப்ரஹ்மமே முழு ஆநந்த ஸ்வபாவமென்று தீர்மானிக்கப்படுகிறது. 'இனன்' என்பதற்குக் கருத்து, 'தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந:' என்று தொடக்கத்திலே இந்த ஆத்மாவென்று கூறப்பட்ட மந்த்ர வர்ணோக்தமான முழுவுணர் ப்ரஹ்மமே 'முழுநலம்' (அதாவது: ஆநந்தமய ப்ரஹ்மம்) என்ற ஸூத்ரப் பொருளை 'இனனுணர் முழுநலம்' என்கிற சிறு தமிழ் ஸூத்ர மொழியால் விளக்கும் ரஸம் ரஸிக்கத்தக்கது.

இனன் என்று அநுவதிக்கப்படும் சாரீரனான ஆத்மாவே 'கம்' என்று ச்ருதிகளில் சொல்லப்படும் பூர்ணாநந்தமென்பதை சாரீரகமென்கிற ஸூத்ர சாஸ்த்ரத் திருநாமமே இந்த சாஸ்த்ரத்திற்கு ப்ரதாந ப்ரதிபாத்யமாக விளக்குகிறது. தைத்திரீயோபநிஷத்தில் ஆநந்தவல்லீ ப்ருஹதாரண்யகாதிகளிலுள்ள அந்தர்யாமி ப்ராஹ்மணம் முதலிய ச்ருதிகள் சேதநாசேதந முழு ப்ரபஞ்சத்தையும் தனக்கு உடலாகக் கொண்டு ஓருயிராய் உள்ளிருந்து வ்யாபித்து நியமிக்கும் 'சாரீர ஆத்மா' என்பவனே ஆநந்தமயன். ப்ருகுவல்லியில் சொல்லப்பட்ட ஜகத்காரணமான ஆநந்தம் அந்தர்யாமி ப்ராஹ்மணம் சொல்லுகிறபடி அமுதமான திவ்யமான ஏகனான தேவனான நாராயணன் என்பதை சாரீரனே 'கம்' என்று அறுதியிடும் சாரீரகத் திருநாமம் விளக்குகிறது. 'கம்' என்பதற்கு, ஸுகம், ஆநந்தம் என்பது பொருள். 'கம் ப்ரஹ்ம' என்று ச்ருதிகளில் ப்ரஹ்மம் ஸுக விசிஷ்டம் ஆநந்த பூர்ணம் என்று படிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ பாஷ்யத்திலும் இந்த அதிகரணத்தில் "சாரீரனே இந்த சாஸ்த்ர ப்ரதிபாத்ய பரமாத்மாவானதால் இந்த சாஸ்த்ரத்திற்கு சாரீரகமென்று திருநாமம் சாத்தப்பட்டதென்று அபியுக்தர்கள் கூறுவர்" என்று ஸாதிக்கப்பட்டது.

'பொறியுணர் வவையிலன்' என்பது, 'அத்ருச்யே அநாத்ம்யே அநிருக்தே அநிலயநே' என்று ஆநந்தவல்லியில் வர்ணிக்கப்படும் 'அத்ருச்ய' ப்ரஹ்மத்தைக் குறிக்கும். 'அத்ருச்யம்' என்பதற்கு, 'அசக்ஷுராதி க்ராஹ்யம்' என்பது உபநிஷத் பாஷ்யப் பொருள். 'பொறியுணர் வவை' என்கிற ஆதி

சப்தத்தினுல் அபிருக்த மென்பதையுங் கொள்ளலாம். 'சுவூ ரவதூ நஸாரஸஹ' என்பதை, 'மனனுணர் வளவிலன்' என்பதால் குறிப்பதாகவுஞ் சொல்லலாம்.

'இனன்' என்பதற்கு 'ஸஷஃ சுயம், சுஸள' என்பவை ஸம்ஸ்க்ருத ப்ரதி பதங்கள். 'தஸ்யஸஷஸவஸாஸீர க்ஷ்ஜா' 'ஸயஸ்ராயம் வ-ஈ-ஷெ யஸ்ராஸாவாஹிதெ்ய ஸஸகஃ' 'யஸஷொகர க்ஷிதெ்யஹிரண்யஃ வ-ஈ-ஷொ ஃஜஸ்யதெ' என்கிற தைத்திரீய ச்ருதி வாக்யங்களையும் அந்தராதித்ய வித்யா வாக்யத்தையும் ஸூசிக்கிருர். 'இனன்' என்கிற பதத்திற்கு ஸூர்யன் என்றும் ப்ரஸித்தப் பொருள். இந்தப் பதத்தால் தைத்திரீய ச்ருதியில் சொல்லப்படுகிற ஆதித்யாந்தர்வர்த்தி புருஷனையும், இதன் அடுத்த அந்தராதிகரணத்தில் விசாரிக்கப்படும் சாந்தோக்யாந்தராதித்ய வித்யையில் சொல்லப்படும் ஆதித்யாந்தர்வர்த்தி புருஷனையும் குறிக்கிருர். அடுத்த அதிகரணம் இந்த அதிகரணத்திற்கு ஶேஷ மென்பதையும் இங்குள்ள 'இனன்' என்ற பதத்தால் ஸூசிக்கிருர். 'இனன்' என்றும் ஆதித்யாந்தர்வர்த்தி புருஷனுடைய திருமேனி திருவடி நகம் முதல்கொண்டு முழுவதும் ஜ்ஞாநாநந்தச் சுடர்மயம்; முழுவுணர் முழுநலம் என்ற பொருளும் 'இனனுணர் முழுநலம்' என்பதால் விளக்கப்படுகிறது. அந்த ச்ருதியில் 'மயம்' என்று படித்திருப்பது எப்படி 'முழு' வென்ற பொருளைக் கொடுக்கிறதோ அப்படியே தான் 'ஆநந்தமயன்' என்ற பதத்தில் 'மயம்' என்ற பதத்திற்கு 'முழு' வென்று பொருள் என்பதையும் விளக்குகிருர்.

'இனன் என்னுயிர்' என்று சேர்த்து அந்வயித்துக்கொள்வதால், 'ஸஷசெக்ஷ்ஜா ஸஷசெக்ஷ்ஜா' என்று திரும்பவும் திரும்பவும் இரண்டாம் பாதத்தில் முதலதிகரணத்தில் விசாரிக்கப்படும் ஶாண்டில்ய வித்யையில் ஆநந்த பரவசராய் உரைப்பதையும், இந்தப் பாதத்தின் கடைசி அதிகாரணத்தில் கௌஷீதகீ உபநிஷத்தில் இந்த்ர னென்னும் ஶாஸ்த்ர த்ருஷ்டி ஸம்பந்நரும் தத்வதர்சியுமான வாசார்யர் ப்ராணனுகிய ப்ரஜ்ஞா ஸ்வரூபனுய் நான் உளன், அப்படிக்கொத்த என்னை அம்ருதமென்று உபாஸனை செய் என்று உபதேசிப்பவர், அந்த உபதேசத்தின் முடிவில் "இந்த ப்ராஜ்ஞனை ஆநந்தனை அம்ருதனை ஆத்மா ப்ராண னென்னும் ஜகதாதாரமான ஆத்மா இவர் ஸர்வலோகாதிபதி ஸர்வேச்வரன். அந்த இவர் என்னுடைய உயிர் என்று தெரிந்துகொள்ள வேணும், 'இனனென னுயிர்' என்று அறியவேண்டும் என்று அறுதியிட்டதையுமிங்கே தாமும் நினைத்து நமக்கும் அறிவிக்கிருர். ஶாரீக ஶாஸ்த்ர த்ருஷ்டியை ஶாஸ்த்ராரம்பத்திலேயே குறிக்கிருர். ஶாண்டில்ய பகவான் 'ஸஷசெக்ஷ்ஜா சுஜஹ ஃஜஉயெஜ்யாயாநெஹெ்யாரொகெஹ்ஃ' என்று திரும்பவும் திரும்பவும் பரவசமாய் ஈடுபட்டதையும் 'இனனென னுயிர்மிகு நரையிலனே' என்று இங்கே ஸ்மரிக்கிருர்,

[தொடரும்]

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

சீர்திருத்தம்

[ஸ்ரீ. உப. தேசிக தர்சந விஜபத்வஜ புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான், ஸ்ரீரங்கம்.]

மனு ஸ்ம்ருதியில்

“ 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍇𑌦𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑍌 𑌯𑍌 𑌸𑍍𑌯𑌾𑌤𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑍌 ।
𑌧𑌰𑍍𑌮𑌂 𑌚𑌾𑌪𑍍𑌯𑌸𑍁𑌖𑍋𑌦𑌰𑍍𑌕𑌂 𑌲𑍋𑌕𑌸𑌂𑌕𑍍𑌰𑍁𑌷𑍍𑌟𑌮𑍇𑌵 𑌚 ॥ ”

என்கிற ச்லோகத்தில் உலகம் வருந்தக்கூடிய தர்மத்தை விட்டுவிடும்படி சொல்லியிருப்பதால், நமது தேசத்திலிருக்கும் ஜாதி பேதங்களும் தீண்டாமையும் இவ்வுலகத்தில் சில மனிதர்களுக்கு வருத்தத்தை உண்டுபண்ணுவதால், அவைகளை விட்டு விடுவது தர்மம் சாஸ்த்ர ஸம்மதமென்று இக்காலத்துச் சில புத்திமான்கள் சொல்லுகிறார்கள். ஷை மனு ஸ்ம்ருதி ச்லோகத்திற்கு இவர்கள் சொல்லுகிறபடி அர்த்தமானால், இவ்வுலகத்தில் அழகுள்ளவனைக் கண்டு அழகில்லாதவனுக்கு வருத்த முண்டாவதால் அழகுள்ளவன் தன் அழகை எப்படியாவது கெடுத்துக்கொள்ளவேண்டும். ஏழையாக இருக்குமவன் தனிகர்களைப் பார்த்து வருந்துவதால் தனிகர்களும் ஏழையாகவேண்டும். புத்தியின் மஹிமையினால் மந்த்ரி ஸ்தானத்தி லிருக்கிறவர்களைப் பார்த்து மதியில்லாதவன் வருந்துதலால் மந்த்ரி ஸ்தானத்தை நிர்வஹிக்குமவர்கள் அந்த ஸ்தானத்தை விட்டுவிடவேண்டும். பத்நீ புத்ரன் இல்லாதவன் பத்நீ புத்ர னுள்ளவர்களைப் பார்த்து வருந்துவதற்காக அக்குடும்பியானவன் பத்நீ புத்ரர்களை விட்டு ஸந்யாஸம் பண்ணிக் கொள்ளவேண்டும். உண்டு ஜரிக்க ஶக்தியில்லாதவன் உண்டு களித்திருக்குமவனைப் பார்த்து வருந்துவதற்காகப் பூர்ணமாக உண்டு உகந்திருக்குமவன் பட்டினியாய் வருந்தவேண்டும். வயது முதிர்ந்த கிழவன் யௌவநமுள்ளவனைப் பார்த்து வருந்தினால் சிறுவன் எப்படிக் கிழவனாக முடியும்? ஆயுள் நிறைந்த பந்துக்க ளுள்ளவனைப் பார்த்து அல்பாயுஸ்ஸான பந்துக்களுடையவன் வருந்தினால் தீர்க்காயுஸ்ஸான பந்துக்க ளுள்ளவன் அதற்காகத் தன் பந்துக்களை ஹிம்ஸை பண்ணுவது உசிதமாகுமா?

ஆகவே, அவரவர்கள் முன் ஜன்மத்தில் செய்த கர்மங்களுடைய பயன்களான மேன்மையையோ தாழ்மையையோ இந்த ஜன்மத்தில் அடைந்திருந்தால், அவைகளை நம்முடைய வருத்தத்தினால் அடையவும் போக்கிக்கொள்ளவும் முடியா தாகையினால், இது நாம் முன்பு செய்த கர்ம பலம் என்று தீர்மானித்து, இனி அப்படிப்பட்ட தாழ்மை வராதபடி நல்ல கார்யங்களைச் செய்திருப்பதே அறிவின் பயனாகும்.

அப்படியே ஜாதி பேதங்களும் தீண்டாமையும் முன் ஜன்மத்தில் பண்ணின கர்மங்களுடைய பயனுக உண்டாகின்றனவென்று ஶாஸ்த்ரங்களில் சொல்லுகிறபடியினுல், அவ்விஷயத்திலும் அவரவர்கள் தங்கள் மனத்தை அடக்கிக்கொண்டிருக்க வேண்டியதே உசிதம். இப்படிச் சிலர் வருந்துவதற்காக ஸகல ஶாஸ்த்ர ஸம்மதமாய் அநாதி கால ஸித்தங்களான ஜாதி பேதங்களையும் தீண்டாமையையும் ஒழிக்கிற புத்திமான்கள் ஸ்த்ரீகளாவது அல்லது புருஷர்களாவது வருந்தினுல், ஸ்த்ரீகளைப் புருஷர்களாகவும் புருஷர்களை ஸ்த்ரீகளாகவும் மாற்றிவிடுவார்கள் போலும்! ஒருவனுக்குக் கிழத்தனம் மரணம் இவைகளோ மஹாவ்யாதிகளோ அநிஷ்டமானுல், அவைகளையும் போக்கி, உலகம் முழுவதும் கிழத்தன மில்லாமலும் மரண மில்லாமலும் வ்யாதி இல்லாமலும் நமது புத்திமான்கள் செய்துவிட ஸித்தமாக இருப்பார்களென்றே நாம் நினைத்திருக்கவேணும்.

மநு ஸ்ம்ருதியில் உலகம் த்வேஷிக்கக்கூடிய காரியங்களை விடச்சொன்னது, ஸர்வ ஶாஸ்த்ர ஸம்மதமாய் அநாதி கால ஸித்தமாயிருக்கிற தர்மங்களை விடச் சொன்னதன்று. நித்ய நைமித்திகங்க ளல்லாது நாம் இஷ்டமானுல் செய்யலாம் என்றிருக்கிற தர்மமானது உலகத்திற்குப் பிடிக்காவிட்டால் அதை விட்டுவிடலாம் என்று சொல்லுகிறதென்று அஷ்டகா ச்ராத்தத்தில் கலியுகத்தில் கோவதம் முதலானவை விடத்தக்கவை என்று குல்லூக பட்டர் வ்யாக்யானம் செய்திருக்கிருர். இதனுல் அநாதி கால ஸித்தமான ஜாதி பேதங்களையும் தீண்டாமையையும் விடச் சொன்னதல்ல.

ஸ்ரீ:

ஸ்ரீ𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

உத்தமராஜரின் உபதேசமும் ஸாத்விக ராக்ஷஸ நாகரிகங்களும்

[ஸ்ரீ. உ.ப. ரா. பத்மநாபாசார்யர் ஸ்வாமி, வேதாந்த சிரோமணி, நெடுந்தெரு.]

ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் இப்பூவுலகின்கண் ராமபிரானுய் அவதரித்தபோது, '𑌰𑌾𑌘𑌵𑌤𑍍𑌵𑍇𑌽𑌭𑌵𑌤𑍍𑌸𑍀𑌤𑌾' என்கிறபடி லோக மாதாவான பெரிய பிராட்டி ஸீதாதேவியாய் மிதிலையில் அவதரித்தாள். அவளால் '𑌪𑌿𑌤𑌾 𑌮𑍇 𑌮𑌿𑌥𑌿𑌲𑌾𑌧𑌿𑌪𑌃 என்றும், '𑌵𑌯𑍋𑌵𑍃𑌦𑍍𑌧𑌶𑍍𑌚 𑌤𑍇 𑌪𑌿𑌤𑌾' என்றும், பல விடங்களில் தம் தகப்பனுர் என்று வாயார வழங்கும் பாக்யம் பெற்றவர் ஜநக மஹாராஜர். இம்மன்னரை ஸரஸ்வதீ வல்லபரான ப்ரஹ்மாவினுடைய "𑌨 𑌦𑍇𑌵𑌾 𑌮𑌨𑍁𑌜𑌾

காவ்யே காசித்ர பவிஷ்யதி" என்கிற வரப்ரஸாதத்தால் பொய்யிலா மொழியராய் விளங்கும் ஆதிகவி வால்மீகி பகவான், பாலகாண்டத்தின் கடைசியில், " ததா ஸ ராஜர்ஷிஸங்கேதோ விஸ்ராமய ஸமேயிவான் உத்தமராஜகந்யயா ' என்கிற ச்லோகத்தில் ' உத்தம ராஜர் ' என்று தனிப் பெயரிட்டு அழைக்கிறார். இதில், தசரத சக்ரவர்த்தியை ' ராஜர்ஷி ' என்றும், மிதிலை மன்னனை ' உத்தம ராஜர் ' என்றும் வழங்கியிருப்பதில் உள்ள பாகுபாடானது கீழ்க் கண்டவாறு ஆராய்ந்து அநுபவித்தற் குரியது.

தசரதர் திசை பத்திலும் தேர் நடத்தித் தேவேந்த்ரனுக்கும் துணை புரிந்து மகிழ்ச்சி யளிப்பவராயும், தம் நாட்டிலுள்ள ப்ரஜைகளின் கருத்தை அறிந்து அதன்படி அரசு நடத்துவதால் ப்ரஜைகளை ரஞ்ஜிப்பிப்பவராயும், அறுபதினாயிரம் ஆண்டுகள் நிறைந்தும் கைகேயியின் கைப் பதுமையா யிருந்து அநிஷித்த காம்யங்களாலே தமது இந்த்ரியங்களை ரஞ்ஜிப்பிப்பதில் குறைவற்றவராயும் இருந்தமையால் ராஜத்வமும், தம் உயிருக்குயிரான ராமபிரானை முதலில் விச்வாமித்ரரோடு அனுப்பியும், கடைசியில் காட்டுக்கு அனுப்பியும், படாதன பட்டாகிலும் ஸத்ய மென்னும் தவத்தையே பெரிதென மதித்துக் காக்கு மியல்பினரான தபோதநரா யிருந்தமையால் ரிஷித்வமும், ஒருங்கே சேர்ந்து விளங்கினமை தோற்ற தசரதரை ' ராஜர்ஷி ' என்று வால்மீகி பகவான் அழைத்ததாகச் சொல்வது சாலப் பொருந்தும். மிதிலை மன்னரான ஜநக மஹாராஜரோ வெனில், ' மிதிலாயாம் ப்ரதீப்தாயாம் ந மே கிஞ்சந தஹ்யதே ' [மிதிலாபுரி எரிந்தால் எனக்கு ஓர் அழிவும் இல்லை] என்று கலங்காமல் நிற்கும்படியான ஆத்மாநாத்ம விவேக ஜ்ஞாந பூர்த்தியாலே ஏற்பட்ட காம க்ரோதேந்த்ரிய ஜயத்தாலும், ' ஜநகோ ஜநக இதி ஜநா ஆதாவந்தி ' என்கிற ஆரண்யக வாக்யத்தின்படி உபநிஷதர்த் மான பரமபுருஷனைப் பல பெரியோர்களிடம் கேட்டறிந்த வேதாந்த விஜ்ஞாநத்தாலும், அந்த ஜ்ஞாநத்துக் கேற்றபடி பரமபுருஷாராதனைக வேஷமான கர்ம யோகாநுஷ்டாநத்துக்கு, ' கர்மணைவ ஹி ஸம்ஸித்திம் ஆஸ்திதா ஜநகாதய: ' என்று கண்ணன் கீதையில் ப்ரதமோதாஹரணம் பண்ணும்படி ஸாத்விகத்யாக புரஸ்ஸரமான கர்மாநுஷ்டாநங்களைச் செய்வதாலும், புருஷோத்தமனையே ரஞ்ஜிப்பித்துக்கொண்டிருந்தமையால் ஜநகமஹாராஜரை உத்தம ராஜர் என்று வால்மீகி பகவான் போற்றி யுகந்தார் என்றல் மிகையாகாது. இவ்வுத்தமராஜர் ஸீதாப் பிராட்டியை ரகுவீரனிடம் அர்ப்பிக்கும்போது,

" இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ ।
ப்ரதீச்ச சைநாம் பத்ரம் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா ॥
பதிவ்ரதா மஹாபாகா சாயேவாநுகதா ஸதா ।
இத்யுக்த்வா ப்ராக்ஷிபத் ராஜா மந்த்ரபூதம் ஜலம் ததா ॥"

என்று சொல்லும் பொன்மொழிகளில் ஆழ்ந்து கிடக்கும் கருத்துக்களைச் சற்று ஆராய்வோம்.

இங்கே, (1) 'இயம்' என்கிற பதத்தால் 'ஸீதா மம ஸுதா' முதலான பதங்களால் சொல்லப்போகும் பிராட்டியின் ஆத்ம குணங்களுக்கு ஆதார பூதமான ஸ்வரூபத்தைக் குறிக்கிறாரென்றும், (2) பிராட்டியின் திருமேனியும் கண் முதலான உறுப்புக்களும் அழகுக்குப் பிறப்பிடமாய் வாயிட்டு அளந்து கூற இயலாததாயிருப்பதால், ரூப குணார்ணவமான அத்திருமேனியுடையவளைக் கடலைக் கையிட்டுக் காட்டுவதுபோல் இயம் என்பதாகக் காட்டி, அவ்வழகை நேரில் கண்ணாலேயே பார்த்துக்கொள்ளும்படி தெரிவிக்கிறாரென்றும், (3) ராமபிரானுக்கு எதிரில் திருமணப் பந்தலில் நிற்கும் பிராட்டியின் ரூப குணங்களை ராமன் நேரில் கண்டறிந்திருக்கும்போது அவைகளை விரித்துக் கூறுவது அநபேக்ஷித விஸ்தாரமாகும் எனக் கருதி ரூப குணங்களையெல்லாம் இயம் என்கிற ஒரே சொல்லில் அடக்கித் தெரிவித்திருக்கிறாரென்றும், (4) வில்லிறுத்த மறுகணமே ராமபிரானின் உடைமையாய்ப் போந்த பிராட்டியின் ரூப குணங்களை விரிவாக வர்ணிக்காமல் 'இயம்' என்கிற ஒரே சொல்லில் சுருங்கச் சொல்வதால், பிறர் மனையாள் தன் பெண்ணாயினும் அவள் ரூபத்தையும் வர்ணிக்காமலிருத்தலே சிறந்ததென்கிற தூய நடத்தையைச் செயலால் செரிவிக்கிறாரென்றும், (5) குலமகளுக்குப் பாதிவ்ரத்யம் முதலான ஆத்மகுணமே அழகூட்டுவதென்றும், அஃதில்லாத ரூபகுணங்கள் மணமற்ற மலர்போல் சுவை தரத்தக்கவையன்றென்றும், ஆத்ம குணத்தின் பெருமையைத் தெரிவிப்பதற்காக 'ஸீதா' 'மம ஸுதா' என்பவை முதலான அநேக பதங்களால் ஆத்ம குணங்களை விரித்தும், ரூப குணத்தை 'இயம்' என்கிற ஒரே சொல்லால் சுருக்கியும் கூறியிருக்கிறார். இந்த ஐந்து விதமான கருத்துக்களை 'இயம்' என்கிற சொல்லில் காணலாம். இவ்விதம் உத்தமராஜர் விரிவாக எடுத்துரைத்த பிராட்டியின் ஆத்ம குணங்களே ரகுவீரனின் திருவுள்ளத்தில் முதலிடம் பெற்று நின்றுகொண்டு, பிராட்டியின்பால் அவருக்கு அளவற்ற அன்பை வளர்த்து வந்தது. இங்கு, "குணாத் ரூபகுணாச்சாபி ப்ரீதிர்பூயோऽப்யவர்த்தத" என்கிற இடத்தில் வால்மீகி பகவான் ஆத்மகுணங்களைக் குறிக்கும் குண பதத்தை முதலிலும், ரூபகுண பதத்தை 'அ' 'ஸுவி' என்பவைகளோடும் தெரிவித்திருப்பதும் நினைத்தற்குரியது.

ஸீதா—பரம பரிசுத்தமான யஜ்ஞ பூமியில் தன் இச்சையாலே அவரித்தவள். இதனால் பிறப்பிடமான யஜ்ஞ பூமியின் குணமான பரிசுத்தியும் பொறுமையும் பிராட்டியினிடம் சொல்லப்பட்டன. இப்பொறுமையின் மிகுதியைக் கற்பரசியாகிய பிராட்டி, ராவணன் செய்த துன்பங்களைப் பொறுத்து அவனை சபித்து நீறாக்காமல் நின்ற நிலையில் காணலாம்.

மம ஸுதா—என்னுடைய பெண். இங்கே 'என்னுடைய' என்கிற விடத்தில் உள்ள ஆறும் வேற்றுமை, பிராட்டிக்கு ஜநகருடைய ஸம்பந்தத்தைத் தெரிவிக்கிறது. இந்த ஸம்பந்தமானது, பிராட்டி யஜ்ஞ பூமியில் உதித்தவளாதலால் ஜநகரிடத்தில் உண்டானதாகத் தெரிவிக்கமாட்டாது; பிராட்டி ஜநகருடைய உடைமை என்பதாகவும் தெவிக்கமாட்டாது. ஏனெனில்:

* "ஊநநஜ் பதஜெ விதூ யஸூ ஜெ நாஷி கிஞ்ச ந।
மிமிலாயாம் ஷ்ரீலாயாம் ந ஜெ கிஞ்ச நஹாதெ॥"

[அளவிடமுடியாத ஸமஸ்த பதார்த்தங்களும் எனக்கு அந்தராத்மபூதனான பரமாத்மாவினுடையது; எனக்கு யாதொன்றுமில்லை; ஆனகயால் மிதிலை எரிந்தால் எனக்கோர் அழிவுமில்லை] என்று தன்னையும் தன் உடைமையையும் பரமாத்ம சேஷமாகத் தீர்மானித்திருக்கும் ஜனக மஹாராஜர், தாம் எடுத்து வளர்த்த ஸீதாப்பிராட்டியைத் தமது உடமையாக ஒருபோதும் சொல்ல மாட்டாராதலால், இந்த ஸம்பந்தமானது பிராட்டி ஜனகருடைய உடைமை என்பதாகவும் தெரிவிக்கமாட்டாது. ஆகையால் 'ஜலஸுதா' என்கிற இடத்திலுள்ள ஆறும் வேற்றுமையானது, பிராட்டி ஜனகருக்கு நியாம்யையாய் அடங்கியிருந்ததைத் தெரிவிக்கிறது. அதாவது: பிராட்டி பதிஸம்யோக மல்லது தரிக்கமாட்டாத பருவம் நிறைந்தும், தானாக மணாளனைத் தேடி வரிப்பதை அறியாத மடந்தையாய், ஜனக மஹாராஜர் வைத்த வில்லிறுத்தல் என்னும் பெரும் பணயத்தில் தேறி, அவரால் தேர்ந்தெடுக்கப்படுபவரையே தன் மணாளனாகக் கொண்டு 'பிதா ரக்ஷதி கௌமாரெ' என்கிற மநு வசநத்தின்படி ஜனக மஹாராஜருக்கு அடங்கி, அச்சமும் மடமும் நாணமும் நிறைந்திருந்த நிலையைத் தெரிவிக்கிறது. இதனால் குலமக்களுக்கு அச்சம் மடம் நாணம் என்பவைகளே அழகு தரும் தன்மைகள் என்று சொல்லப்பட்டன. தவிர, ஜல ஸுதா என்பதற்கு, க்ஷத்ரிய குலத்தவராகிய தம்மால் வளர்க்கப்பட்டவளாதலால் க்ஷத்ரிய குலத்தில் உதித்த ரகுபுங்கவனுக்கு ஸத்ஸந்தாநாபிவ்ருத்தி மூலமாகப் பிராட்டியானவள் குலநலம் பயக்க வல்லவள் என்பதாக முன்னோர்களின் வ்யாக்யாநங்களில் அருளிச்செய்யப் பட்டிருக்கிறது. இந்த அர்த்தத்தில் ஸமாந ஜாதிப் பெண்ணை மணப்பதே குலவ்ருத்திகரம் என்பது தெரிவிக்கப்படுகிறது.

ஸஹயஜஷுசரீ தவ—நீர் (ராமர்) எந்த தர்மத்தைச் செய்தாலும் உமக்கு உதவியாய் நின்று அத்தர்மத்தின் பயனில் கூறு பெறுபவள் இவள். இந்தப் பதி ஶுச்ருஷை என்னும் குணத்தை 'ஸஹவத்நா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாஸகு' என்கிற விடத்திலும், வநவாஸாநுயாத்ரையிலும் ஜனஸ்தானத்தில் கரன் முதலான பதினாலாயிரத்து மூன்று ராக்ஷஸர்களையும் பெருமாள் வெட்டி விழ்த்திவந்ததும், பிராட்டி அமுதினும் இனிய தன் திருமேனியோடு நெருங்க அணைத்து அவருடைய வீரவ்ரணங்களைப் போக்கின நிலையிலும் காணலாம். இதனால் ஸ்த்ரீகள் தனித்து வ்ரதோபவஸாதி தர்மங்களைச் செய்யவேண்டா; அவைகளைச் செய்யும்போது பர்த்தாவுக்குத் தொண்டு செய்தே அத்தர்ம பலனை அடையாலாம் என்று சொல்லப்பட்டதாகிறது.

---

*இந்த ச்லோகம் பாலகாண்டம் 67-வது ஸர்க்கம் 21-வது ச்லோகத்தின் கோவிந்தராஜீய வ்யாக்யாநத்தில் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. 'ஊநநஜ் பதஜெ விதூ' என்கிற இடத்தில், ஜெ என்பது அவிவக்ஷித நிஷ்கர்ஷத்தாலே தனக்கு ஆத்மபூதனான பரமாத்மாவைச் சொல்லுகிறது. 'யஸூ ஜெ நாஷி கிஞ்ச ந' என்கிற இடத்தில் ஜெ என்பது விவக்ஷித நிஷ்கர்ஷத்தாலே தன் ஆத்மாவைமட்டில் குறிக்கிறது.

வதிவ்ரதா—தன் துன்பம் துடைத்தலிலும் இன்பம் எய்துவதிலும் பதியின் கையையே நோக்கிநிற்கும் பெருநோன்பு கொண்டவள். மற்றொரு தெய்வம் தொழாமை என்னும் இந்த அநந்யதைவத்வம் என்னும் தன்மையை, அசோக வநத்திலிருந்து நொடிப்பொழுதில் ரகுபுங்கவன் ஸந்நிதாநம்கொண்டு சேர்த்து ராக்ஷஸிகளால் ஏற்படும் கஷ்டத்தைப் போக்கிவிடுவதாகச் சிறிய திருவடி விண்ணப்பித்தபோது மறுத்துரைத்த பிராட்டியின் பொன் மொழிகளில் காணலாம். இதுதவிர இப்பதத்துக்கு பதியான ரகுநந்தநன் ஶரணாகதர்களுக்கு அபய மளிக்கும் வ்ரத முடையவராக இருப்பதுபோலவே, பிராட்டி, தானும் அவ்வித வ்ரத முடையவள் என்பதாக மற்றொரு பொருளும் கூறலாம். இதை அஶோக வநத்தில் தன்னை வருத்திய ராக்ஷஸிகளைச் சிறிய திருவடி கொல்வதற்கு முயற்சிக்கும்போது அவரிடமிருந்து பாதுகாக்கும் நிலையில் காணலாம்.

உதாரா—ரகுவீரனை தாங்கள் செய்யும் லோகரக்ஷண கார்யங்களில் பெரும் பங்கு கொள்ளும் வீறு பெற்றவள். இந்த வீர பத்நியின் தன்மையைப் பஞ்சவடியில் தன்னை ராவணன் திருடிச் செல்வதற்கு இட மளிப்பதற்காகத் துணைநின்ற இளையபெருமாளையும் பிரியும்படி செய்தும், ராவணனால் திருடப் பட்டு அஶோக வநம் சேர்ந்து கற்பரசியாகிய தன்னிடம் அவன் மனத்தாலும் வாயாலும் செய்த குற்றங்களால் அவனுடைய ஆயுளளவு முதலானவை குன்றும்படிக்கும், தார்மிகரான விபீஷணனுடைய ஸம்பந்த மில்லாமல் போகும் படிக்கும் செய்து, ராவண ஸம்ஹாரத்தில் ரகுவீரனுக்குச் சுமையைக் குறைத்துப் பிராட்டி பெரும் பங்கு கொண்ட நிலையில் காணலாம். இதனால் பதியின் கடமையான ஸத்ஸந்தாநாதி வ்ருத்தியில் பத்நியானவள் பெரும் பங்கு சுமப்பவள் என்று சொல்லப்பட்டது.

ச்சாயேவ ஸா அநுகதா—நிழல்போல் எப்போதும் பின் தொடர்ந்து நிற்பவள். உருவமானது சந்த்ர ஸூர்யாதபத்திலாவது விளக்கொளியிலாவது படும்போது அந்த உருவத்தின் நிழல் தோற்ற மளிக்கிறது. வீடு மரம் முதலானவைகளின் நிழலிலாவது இருட்டிலாவது உருவமானது இருக்கும்போது அதன் நிழல் தோன்றுவதில்லை. இவ்விதம் நிழலில்லாமல் சில ஸமயங்களில் உருவம் தோன்றினாலும், உருவம் இல்லாதவிடத்தில் ஒருபோதும் நிழல் தோன்றாது. அதுபோலவே பதிவ்ரதையின் உள்ளத்தைப் பதியை விட்டுப் பிரித்து ஒருபோதும் காணமுடியா தென்பது கருத்து. இதனால், மநு முதலானவர்கள் விதித்த முறைப்படி பதியானவன் வம்ஶம் வ்ருத்தியாகவேண்டியதற்காக மறு மணம் செய்துகொண்டாலும், பத்நியானவள் எக்காரணத்தைக்கொண்டும் வேறு புருஷனை மனத்தாலும் விரும்பத்தகா தென்று சொல்லப்பட்டது. இவ்விதம் பிராட்டியின் பதிபக்தியை, "தாவஸ்யஹம் உசித ஜிஜீவிஷேயம் யாவத் வ்ருத்திம் ஶ்ருணுயாம் ப்ரியஸ்ய" என்று ராமனுடைய சரித ஸ்மரணம்தான் தனக்கு ஜீவாதாரமாகக் கூறின நிலையில் காணலாம். இதுதவிர, ச்சாயா என்பதற்குக் காந்தி என்று மற்றொரு பொருளும் உண்டு. அப்பொருள் கூறி

னுலும், காந்தியையும் காந்தியுடையவனையும் ஒருபோதும் பிரித்தெடுக்க முடியாததுபோலவே, பதிபத்நீஸம்பந்தமும் உள்ளளவும் ஒழிக்க ஒழியாததென்றே கருத்து. இவ்விதம் இத்திவ்ய தம்பதிகளின் பிரியாச் சேர்க்கையை, 'அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா ॥' 'ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம்' என்பது முதலான இடங்களில் காணலாம்.

ப்ரதீச்சசைநாம்—இவ்விதம் குணங்கள் நிறைந்த இவளை அன்புமிக்க ஆதாரவுடன் தரிக்கவேண்டும்.

பத்ரம் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா—உமக்கு மங்களம் உண்டாகுக. பாணிக்ரஹணம் செய்துகொள்ளும். 'இத்யுக்த்வா ததா ராஜா மந்த்ர பூதம் ஜலம் ப்ராக்ஷிபத்' என்று சொல்லி, அப்பொழுது ஜநக மஹாராஜர் மந்த்ர பரிசுத்தமான தீர்த்த தாரையை வார்த்தார் என்று பொருள். பாணிக்ரஹணம் என்கிற செயலைத் தனக்கு ஸமாநமான ஜாதியில் பிறந்த பெண்ணை மணம் செய்துகொள்ளும்போது மட்டில் செய்யவேண்டியதாக மநு சொல்லுகிறார். அதன் கருத்தானது, புருஷர்கள் ஐஹிக இன்ப வெள்ளத்தில் இறங்குவதற்கு ஸமாந ஜாதியில் பிறந்த பெண்தான் கைப்பிடியோடு கூடிய சரியான துறையென்பதையும், அவ்விவாஹமே அபாய மற்ற தென்பதையும், அவளைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு யாவையும் பர்த்தாவானவன் தன் கையில் ஏற்றுக்கொள்ளுகிரு னென்பதையும் உணர்த்துகிறது. தீர்த்த தாரையை விடுவதன் கருத்து யாதெனில்—தீர்த்த மென்பது சுத்த ஸத்வ மூர்த்தியான ஸ்ரீபதியின் திருப்பள்ளியாயும் ஸகல ப்ராணிகளின் ஜீவாதாரமாயும் சுத்தி ஹேதுவாயும் இருக்கும் பொருள். ஆகையால் தீர்த்தம் இருக்குமிடத்தில் பகவத் ஸாந்நித்யமும் குளிர்ச்சியும் சுத்தியும் இருப்பது கண்கூடு. ஆகவே அந்த தீர்த்ததாரையை முன்னிட்டுக்கொண்டு தாநம் செய்தால், கொடுப்பவர் வாங்குபவர், கொடுக்கப்படும் பொருள், கொடுக்கும் காலம், தேசம், யாவும் சுத்தமாகி, அந்தத் தாநமானது நல்ல புண்ய தேச காலங்களில் பகவானுடைய ஸந்நிதாநத்தில் செய்ததாக ஆகி, 'தேசே காலே ச பாத்ரே ச தத்தா நம் ஸாத்விகம் ஸ்ம்ருதம்' என்கிற கண்ணன் திருவாக்கின்படி ஸாத்விக தாநமாகுமென்கிற கருத்திலுல்தான் பெரியோர்கள் ஸகல தாநங்களையும் தீர்த்த தாரா பூர்வமாகச் செய்துவருகிறார்கள். இவ்விதம் கொடுப்பவர் வாங்குபவர் எல்லாம் அளவிலாத ஆநந்தத்தை அடையவேண்டியே ஆபஸ்தம்ப ஸூத்ரகாரரும் "ஸர்வாண்யுதகபூர்வாணி தாநாநி யதாச்ருதி விஹாரே" என்று ச்ருதி விஹிதமான கர்மங்களில் செய்யும் தாநங்களை ச்ருதி வாக்யோச்சாரண பூர்வமாகவும், ஸ்ம்ருதி விஹிதமான கர்மங்களில் செய்யும் ஸகல தாநங்களையும் தீர்த்த தாரா பூர்வமாகவும் செய்யவேண்டும்] என்பதாகக் கட்டளையிட்டிருக்கிறார். இந்த ஆபஸ்தம்ப ஸூத்ரம், த்விதீய வர்ணாச்ரம காண்டத்தில் தாந நிரூபணத்தில் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே 'இயம் ஸீதா' என்று தொடங்கி, 'ஜலம் ததா' என்கிற அளவும் உள்ள இரண்டு ச்லோகத்திலும், புருஷர்கள் பரதார வர்ஜநாதிகளையும் விட்டுத் தனக்கு ஸமாநமான ஜாதி குணங்களையுடைய பெண்ணை மணம் செய்துகொண்டு, அவளை அன்பும் ஆதரவுமாய்ப் பரிபாலிக்கக் கடமைப்பட்டவர்களென்பதாகவும், பெண்கள், பொறுமை அச்சம் மடம் நாணம் பதிசுச்ரூஷை இவைகளைப் பெரிதாய் மதித்தும், ஸமாந ஜாதியான புருஷனை மணந்து ஸஹ-

லைகளாய் ஆயுளுள்ளவனவும் இருக்கவேண்டு மென்பதாகவும், உபந்யாஸகர்கள், கேட்பவர் அறிந்த விஷயத்தைச் சொல்வதும், கட்டுரை எழுதுபவர்கள் படிப்பவர் அறிந்த விஷயத்தை எழுதுவதும், பயனற்ற பணி யென்பதாகவும், உத்தமராஜருடைய உபதேஶமானது காணக் கிடைக்கும். இவ்வுபதேசமும் நடத்தையும் ஸாத்விகர்களான தார்மிகர்கள் நிறைந்த மிதிலா நகரத்திய சரிதமாகையால் ஸாத்விக நாகரிக மென்றும் இதற்கு எதிரிடையான பரதார மோஹம், அச்சமும் நாணமு மின்றி ஜாதி வேற்றுமையும் பாராது மனத்துக்கு இனிய மணாளனை விரும்புவது முதலான தீய நடத்தைகள் லங்கா நகரத்தில் ராவணனிடமும் சூர்ப்பணகையிடமும் இருந்தமையால் இத்தீய நடத்தைகள் ராக்ஷஸ நாகரிக மென்றும் நாகரிகத்தை இருவகுப்பாகப் பிரித்து அவைகளின் பயன்களை ஸ்ரீமத்ராமாயண சரிதமானது காட்டும் அழகு நிகரற்றது. இந்த உத்தமராஜருடைய உபதேச ரூபமான மேற்கூறிய ச்லோகங்கள் இரண்டுக்கும், தனிச்லோகீ முதலான முன்னோர் உரைகளில் இன்னும் சில கருத்துக்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அவைகளை அடியேன் இங்கு மீண்டும் வரைவது பயனற்ற பணியாகு மெனக் கருதி, அவைகளில் அடங்கிய நுட்பமான கருத்துக்களை மட்டும் பெரும்பாலும் தெரிந்தவரையில் இக்கட்டுரையில் எழுதியிருப்பதாக வாசக மஹாஶயர்களிடம் தெரிவித்துக் கொள்வதோடு இந்த வ்யாஸத்தை நிறுத்திக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா வரவு: 1-4-50 முதல் 24-4-50 வரையில்

சந்தா நெ.		பெயரும் விலாஸமும்.	வர்ஷம்		தொகை
					ரூ.
22	ஸ்ரீ.	M. R. A. ஐயங்கார், மாதுங்கா	50	....	3
57	,,	N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மதுரை	49 & 50	....	6
102	,,	K. ரகுநாதய்யங்கார், பாபநாசம்	49	....	3
125	,,	A. பார்த்தஸாரதி, பம்பாய்	50	....	3
167	,,	P. A. ஸ்ரீநிவாஸாச்சாரியார், ஜி. டி. சென்னை	50	....	3
183	,,	K. சுந்தரராஜய்யங்கார், துவரிமான்	47 & 48	....	4
214	,,	S. ஸ்ரீநிவாஸ கோபாலய்யங்கார், சருக்கை	51	....	3
222	,,	K. குப்புஸ்வாமி ஐயங்கார், ஆடுதுரை	49	....	3
224	,,	T. N. வானமாமலை ஐயங்கார், ராஜபாளையம்	50	....	3
251	,,	N. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கரூர்	50	....	3
451	,,	K. R. ஸ்ரீனிவாஸன், சேஷபுரம்	50	....	3
458	,,	T. K. கிருஷ்ணமாச்சாரியா, திருக்கண்டனூர்	48 & 49	....	6
493	,,	A. நரஸிம்ம ஐயங்கார், ஸ்ரீரங்கம்	50	....	3
557	,,	R. சேஷய்யங்கார், ஸ்ரீவில்லிபுத்தூர்	52	....	3
664	,,	S. R. சுந்தரவரதாச்சாரியார், ஸ்ரீ முஷ்ணம்	49	....	3
818	,,	T. S. கிருஷ்ணமாச்சாரியார், தஞ்சை	49	....	3
839	,,	V. R. சாரி, பனேரோ, பொகாரோ P. O.	50	....	3
983	,,	K. வீரராகவாச் சாரியா, மைலாப்பூர்	50	....	3
985	,,	R. அண்ணாதுரை தீக்ஷிதர் பொன்மலை	50	....	3
			மொத்தம் ரூ.		64

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

189270
சென்னை 600 008

ஸகுண ப்ரஹ்ம நிர்ணயம்

[ஸ்ரீ. உப. V. ஸ்ரீநிவாஸையங்கார், ஸ்ரீ ஶார்ங்கீ விஹார்,
கோவிந்த நகர், மலாட், பம்பாய்]

மறுநாள் ஸாயங்காலம் வேந்தன் குறிப்பிட்ட காலத்தில் ஸபையில் வந்து அமர்ந்ததும், வங்கீபுரம் ஸ்வாமி எழுந்து முதல் நாள் வாதத்தைத் தொடர்ந்து சொன்னதாவது :-

'அவிபாகேந த்ருஷ்டத்வாத்' என்கிற ஸூத்ரத்துக்கு என்ன அர்த்தமென்றால் : 'முக்தன் ப்ரஹ்மத்தின் ஶரீரமானதால், ப்ரஹ்மத்தைவிட்டு வேறானவனா யில்லாமல், ப்ரஹ்மத்தையும் அதன் குணங்களையும் அநுபவிக்கிறான்' என்பதே. இங்கு 'விபாக:' என்பதற்கு எங்கள் வேதாந்த தேசிகன் அருளிச்செய்திருப்பதைக் கேட்கவேணும்.

ஓர் திருத்தம்.

சென்ற சித்திரை மீ ஸஞ்சிகையில் 117-ம் பக்கத்தில் 7-வது வரியில், "ஸ்வப்நார்த்த மித்யாத்வத்தை ஸாதிப்பதற்காக, அதிலுள்ள அநபிவ்யக்த ஸ்வரூபத்தை ஹேதுவாக ஸூத்ரக்காரர் சொன்னாரே யொழிய, விச்வ மித்யாத்வத்தை நினைத்தல்ல" என்பதை, "ஸ்வப்நார்த்த மித்யாத்வத்தை ஸாதிப்பதற்காக அதிலுள்ள அநபிவ்யக்த ஸ்வரூபத்தை ஹேதுவாகச் சொன்னா ரென்று வேணுமானாலும் சொல்லலாமே யொழிய" என்று வாசிக்கவும். நம் ஸித்தாந்த ரீதியாக ஸ்வப்நார்த்தங்கள் ஸத்யம். மித்யாவாதிகளின் பக்ஷத்தை நிரஸிப்பதற்கு ஆசார்யர்கள் எவ்வித வாதம் செய்தாலும், மேலே சொன்னபடி விளம்பி வாசித்தால், படிப்பவர்களுக்கு ஸித்தாந்தத்தில் ஸம்சயம் உண்டாகாது. 'த்வே ப்ரஹ்மணீ வேதிதவ்யே' என்கிற ச்லோகம் உபய லிங்க பாதம். ம்ருஷாவாதிகளின் பக்ஷத்தை மறுப்பதற்காக ஏற்பட்டதென்பதை எடுத்துக் காட்டுவதற்காக இது எடுக்கப்பட்டது.

அடுத்தபடியாக 118-ம் பக்கத்தில் 19-வது வரியில் "இந்த ஸூத்ரத்தில் த்ருஷ்டி விதிதான் சொல்லப்பட்டிருக்கிற தென்பது ஸித்தமாகி விடுகிறபடியால்" என்பதை "இந்த ஸூத்ரத்தில் இதிகரண ஸ்வாரஸ்யத்தை யிட்டு த்ருஷ்டி விதி ஸூசிக்கப்படுகிற தென்றாலுங் கூட" என்று திருத்தி வாசிக்கவும். இங்கு அத்வைதிகளும் விசிஷ்டாத்வைதிகளும் த்ருஷ்டி விதியை மோக்ஷோபாயமாக ஒப்புக்கொள்ள வில்லை. ஆனதால், 'ஆத்மேதி தூபகச்சந்தி' என்கிற ஸூத்ரத்துக்கு, இந்த ஶரீரத்துக்கு ஜீவாத்மா எப்படியோ, அப்படியே ஜீவாத்மாவுக்கு அந்தராத்மாவான பகவானை 'தஸ்யாத்மாஹம்' என்று உபாஸ்தி செய்யவேணு மென்பது ஸித்தாந்தம். விஷயம் ரொம்ப கஷ்டமானதால் ஸ்வல்ப வாசக தோஷத்தால் விபரீதார்த்தம் ஏற்பட்டு விடுகிறது. இருந்தாலும், 'கச்சத: ஸ்கலநம் ந தோஷாய'. மஹநீயர்கள் க்ஷமிக்கவேணும்.

V. ஸ்ரீநிவாஸையங்கார்.

'𑌵𑌿𑌭𑌾𑌗𑍋 𑌹𑌿 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑍋 𑌧𑌰𑍍𑌮𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌦𑍁𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃'

[விபாக மென்றால், ஒன்றுக்கொன்று ஸம்பந்தத்துக்கு எதிரிடையான தர்ம விசேஷ மென்பது பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம்,] '𑌤𑍇𑌨 𑌅𑌵𑌿𑌭𑌾𑌗𑍋𑌽𑌪𑌿 𑌅𑌪𑍃𑌥𑌕𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍇𑌵𑍇𑌤𑌿 𑌸𑌿𑌧𑍍𑌯𑌤𑌿 𑌨 𑌤𑍁 𑌨𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍈𑌕𑍍𑌯𑌮𑍍' [அதனால், அவிபாகமாயிருப்ப தென்றால், அதைவிட்டு விலகினதா யில்லாதிருத்தல் என்பதே யொழிய ஸ்வரூபைக்ய மல்ல.]

'𑌸𑍋𑌽𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌸𑌹 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌾' என்கிற விடத்தில், '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌸𑌹' என்பதற்கு, '𑌵𑌯𑌸𑌾 𑌸𑌹 𑌓𑌦𑌨𑌂 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇' என்பதுபோல், இங்கு போக்ய ஸாஹித்யம் ப்ரஹ்ம பர்யந்தம் ஏற்படுவதால், '𑌸𑌹𑌯𑍁𑌕𑍍𑌤𑍇𑌽𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑍇' என்கிற வ்யாகரண ஸூத்ரத்தால் ப்ரஹ்மத்துக்கு அப்ராதாந்ய தோஷம் ஏற்படுவதில்லை. அல்லது சாஸ்த்ரிகள் சொன்னபடி '𑌵𑌿𑌭𑌾𑌗' சப்தத்துக்குப் பேதம் என்றே வேணுமானாலும் வைத்துக்கொள்வோம். '𑌅𑌵𑌿𑌭𑌾𑌗' சப்தத்துக்குப் பேத நிவ்ருத்தி என்று வேணுமானாலும் இருக்கட்டும். அப்படியிருந்தாலும், ஸ்வரூப பேதம் இங்கு நிஷேதிக்கப்படுகிற தென்பதற்கு ஒரு ப்ரமாணத்தையும் காணோமே. '𑌭𑍋𑌗𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑌾𑌮𑍍𑌯𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌚𑍍𑌚' முதலிய ஸூத்ரங்களைக்கவனித்தால் 𑌕𑌿𑌂𑌚𑌿𑌜𑍍𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌂 𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌸𑍁𑌖𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌤𑍍𑌵𑌂 முதலான வைதர்ம்ய பேதங்கள் போகின்றன வென்று சொல்லலாமே யொழிய ஸ்வரூபைக்யம் சொல்ல இடமேயில்லையே. முடிவாகச் சொல்லும் பக்ஷத்தில் முதல் அத்யாயத்தில் முழுவதும் ஜிஜ்ஞாஸ்யமாகச் சொல்லப்பட்ட ப்ரஹ்மம் ஆநந்தகுண விசிஷ்ட மென்றும், ப்ரக்ருதியைப்போல் ஜீவனையும் விட விலக்ஷணமான தென்றும் சொல்லப்பட்டது. இதுவே இரண்டாம் அத்யாயத்தில் ஸ்தூணாநிகநந ந்யாயத்தால் த்ருடீகாரம் செய்யப்பட்டது.

'𑌇𑌤𑌰𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑌾𑌤𑍍 𑌹𑌿𑌤𑌾𑌕𑌰𑌣𑌾𑌦𑌿 𑌦𑍋𑌷𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌿𑌃' என்கிற ஸூத்ரத்தில், ஜீவைக்ய வ்யபதேசத்தால் அஹிதகரண ஹிதாகரணாதி தோஷங்கள் ஸம்பாவிதமாகுமே யென்று விசாரித்து '𑌅𑌧𑌿𑌕𑌂 𑌤𑍁 𑌭𑍇𑌦𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑌾𑌤𑍍', '𑌅𑌶𑍍𑌮𑌾𑌦𑌿𑌵𑌚𑍍𑌚 𑌤𑌦𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌃' என்கிற ஸூத்ரங்களால், ஜீவனை விட்டு வேறானது பரமாத்மா வென்று ஸித்தாந்தம் செய்து, காஷ்டலோஷ்டாதிகளுக்கு எப்படி ப்ரஹ்ம பாவம் பொருந்தாதோ, அப்படியே ஜீவனுக்கும் ப்ரஹ்ம பாவம் பொருந்தா தென்று ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள். இப்படி முதல் இரண்டு அத்யாயங்களையும் கவனித்தால் ப்ரஹ்மம் விசிஷ்டமான தென்றே தெரிகிறது. மூன்றாவது அத்யாயத்தில் ஆத்ம பேதம் அர்த்த லப்தமானது. உபய லிங்க பாதத்தாலும் குணோப ஸம்ஹார பாதத்தாலும் ப்ரஹ்மம் விசிஷ்டமான தென்று தெரிகிறது. புருஷார்த்த பாதமோ வர்ணாச்ரமாதிகளைப்பற்றிச் சொல்வதால், அவர்கள் சொன்ன அத்வைத பக்ஷத்தை நேரிடையாய் மறுக்கிறது. அப்படியே நான்காம் அத்யாயத்தில் அர்ச்சிராதி பாதத்தில் ஸகுண ப்ரஹ்மோபாஸகர்களுக்கு அது மார்க்க மென்று அவர்களே ஒப்புக்கொண்ட விஷயம். பல

பாதத்திலோ ஸ்வரூபாவிர்ப்பாவம் ஏற்பட்டு ப்ரஹ்மத்தோடு ஸமானமான போகம் ஏற்படுகிற தென்று வ்யக்தமாகத் தெரிகிறது. எல்லாவற்றையும் கவனித்தால் இந்த நாலு அத்யாயங்களிலும் எந்த இடத்திலும் உங்கள் அபிப்ராயத்தை ஸூத்ரகாரர் மனஸ்ஸில் கொண்டதாகத் தெரியவில்லை. நீங்கள் சொல்லும் நிர்க்குண ப்ரஹ்மம், இந்த நாலு அத்யாயங்களை விட்டு வேறு ஏதாவது ஐந்தாவது அத்யாயம் உண்டானால் அதில் வேண்டுமானால் இருக்கட்டும். நமக்கு அதைப்பற்றிக் கவலை யில்லை.

மேலும்: லௌகிக ரீதியாகக் கவனித்தாலும் 'நிஷ்களம்' 'நிஷ்க்ரியம்,' 'நிரஞ்ஜன: பரமம் ஸாம்யம்' முதலிய ச்ருதிகளால் நிர்க்குண ப்ரஹ்மமாக ஆகிறான் என்கிறார்கள். எவனாவது ஒருவன் தான் கல்லுக்கு ஸமானமாக அறியும் தன்மையில்லாமற் போக இச்சிப்பனா? அல்லது பரமாத்மாவுக்கு ஸமானமாக ஆநந்தமயனாகி அவன் கைங்கர்யத்தில் ஈடுபட்டு, ஆநந்த பூர்ணனாக இருக்க இச்சிப்பனா? ஸபையோர்களே! கவனிக்கவேணும். இந்த முக்தியின் பெருமையை ஸ்வாமி தேசிகன் அதிகரண ஸாராவளியில் பின் வருமாறு ஸாதித்திருக்கிறார்.

"தத்தத்வேத்யவிஶேஷஸித்திவிதிநா தத்த்வாவபோதாந்விதா:
ஸம்ஸாரே ஹ்ர தத்ஸ்ய ஸாம்யம் ஸ்வயம் நஹி தத்ஸாக்ஷித்விஷோ ஹேதவ: ।
ஸேவம் சேவம் ஸ்வயாமுக்தம் ஶரணம் ஆவஹதேதமுக்த்யேதந ந்யூநஹ்யா
நியமோதாத்வநித்திஶக்தா நிரவயிகரஸா ஸர்வவஸ்தா த்விவஸ்தா ॥"

விஷயச் சுருக்கம்

[டங்கா குப்புஸாமி ஐயங்கார் எழுந்து] ஸபையோர்களே! ஒரு விஜ்ஞாபனம். ஸபையில் மஹா பண்டிதர்கள், கடத்தை யெடுத்துப் படத்தில் போட்டுப் படத்தை யெடுத்துக் கடத்தில் போட்டு, இரண்டையும் தூக்கிக் கிணற்றில் போட்டு, என்னென்னமோ பேசிக்கொண்டால் எங்களுக்கு என்ன புரிகிறது? நாங்களும் புரிந்துகொள்ளும்படி பேசி, எங்களையும் உத்தீர்ணர்களாக ஆக்கவேண்டாமா?

சோகத்தூர் ஸ்வாமி:—உலகத்தில் ஒரு விஷயத்தை அறியவேண்டுமானால், அதை மூன்று விதத்தால் தான் அறியமுடியும். அவை: ப்ரத்யக்ஷம் அநுமானம் ஆகமம் (ஶப்தம்) என்பன. அதில் ப்ரத்யக்ஷத்துக்கு அதீதமான விஷயங்கள் இருப்பதால், ப்ரத்யக்ஷமே முற்றிலும் ப்ரமாண மாகாது. அநுமானத்தை எடுத்துக்கொண்டாலோ, நவீன விஜ்ஞான ஶாஸ்த்ரிகள் அநுமானத்தால் அடையும் பலன் தெரிந்த விஷயமே. இன்று அநுமானத்தால் சரியென்ற விஷயம், நாளை மற்றொரு மேதாவியால் மறுக்கப்படுகிறது. ஆனதால் அநுமானமும் முற்றிலும் ப்ரமாண மல்ல. ஆகையால் ஶப்தம்தான் ப்ரமாண மாகிறது. ஒருவன் ஜநிப்பதற்குக் காரணமான தகப்பனாரைத் தாயாரின் ஆப்த வாக்யத்தால் 'இவன் தகப்பனார்' என்று தெரிந்துகொள்வது ஸஹஜமாயிருக்கிறதே யொழிய, யாராவது 'உன் தகப்பனார் உன்னை உத்பத்தி செய்ததை நேரில்

பார்த்தாயா ?' என்று கேட்கிறார்களா ? கேட்பதுதான் உசிதமான கேள்வியா? லௌகிக விஷய மிப்படியிருக்க, அப்ரத்யக்ஷமான ப்ரஹ்மத்தை அறிவதற்கு, மாதா பிதாக்களைவிட ஆயிர மடங்கு ஆப்தமான ஶாஸ்த்ரம் தான் நமக்கு ப்ரமாண மாகிறது. அந்த ஶாஸ்த்ரம் தான் நமது வேதம்.

இங்கு ஒரு கேள்வி எழலாம். 'எல்லா மதத்திலும் முக்தியடைய அவரவர்கள் மத நூல்கள் இருக்க, நம் வேதத்தை மட்டில் எப்படி ப்ரமாண மாகச் சொல்வது ?' என்று கேட்கலாம். இது ரொம்ப சரியான கேள்வி தான். மஹாராஜாவே! கொஞ்சம் விஸ்தாரமாகச் சொல்ல அநுமதிக்க வேணும். இதர மத நூல்கள் முக்தியைச் சொன்னாலும், நம் வேதம்தான் ஸத்யமான பொருளைக் கண்டுபிடிக்க ப்ரமாண மென்பதற்குக் காரணம், அது வ்யவஹார முறையில் (Logically) ஒப்புக்கொள்ளப்படும் வழியால் ஏற்பட்டிருக்கிறது. இதன் விரிவைப் பிந்தி எடுத்துக்கொள்வேன். சிலர், 'ஈச்வரன் என்றாலும் அல்லா என்றாலும் உம்முடைய பெயர்தான்' என்று ப்ரஸித்த மாகப் பாடுவதைக் கேட்டிருக்கிறோம். இது அஜ்ஞானத்தால்தான். எப்படி ஒரு குதிரையை நோக்கி ஒருவர் 'இது குதிரை' என்று சொல்ல, மற்றொருவர் அதைக் 'கழுதை' யென்று சொன்னாலும், மத்யஸ்தர்கள் வந்து 'குதிரை யென்றாலும் கழுதையென்றாலும் அந்த வஸ்து ஒன்று தான் ஐயா!' என்றால் எவ்வளவு ந்யாயமோ, அவ்வளவு ந்யாயம் தான் ஈச்வர ஸ்வரூபத்தை விவாதித்திருக்கும் மதங்களெல்லாம் ஒன்றையே குறிக்கிற தென்பது. ஆதலால் எதை வேணுமானாலும் பின்பற்றலா மென்றும் கக்ஷி.

'நம் வேதந்தான் ப்ரமாணம் ; மற்ற மத நூல்கள் ஈச்வர தத்வத்தை யறிய ப்ரமாணமாகா' தென்பதை விசாரிப்போம். ஒரு பக்ஷத்தை விவாதித்து ஸ்தாபிக்க ஸ்வபக்ஷரக்ஷணம் (Establishment of one's own point). பரபக்ஷ நிராகரணம் (Refutation of other systems) ஆகிய இவை யிரண்டும் அவச்ய மான வழி. நம் வேதமும், அவ்வேதத்தை அடிப்படையாகக் கொண்ட ப்ரஹ்ம ஸூத்ரங்களும், இந்தப் பலமான வ்யவஹார முறையில் போயிருக்கின்றன. ப்ரஹ்ம ஸூத்ரத்தில் முதல் அத்யாயம் ஸமந்வயாத்யாயம்; இரண்டாவது அவிரோதாத்யாயம்; மூன்றாவது உபாயாத்யாயம்; நான்காவது பலாத்யாயம் என்று பெயர் பூண்டவை. முதல் அத்யாயம் நாலு பாதங்களும் அஸ்பஷ்டதரம், அஸ்பஷ்டம், ஸ்பஷ்டம், சாயாநுஸாரி என்று ப்ரஹ்மம் தான் ஜகத் காரண மென்பதற்கு அஸ்பஷ்டமான வாக்யங்களை யெடுத்து, ப்ரஹ்மம் தான் ஜகத் காரண மென்று ஸூத்ரங்களுக்கு வ்யாக்யாநம் செய்து ஸ்வபக்ஷ ஸ்தாபநம் செய்யப்பட்டிருக்கிறது. 'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' என்று முதல் ஸூத்ரத்தில் சொன்ன ப்ரஹ்மம் எது என்கிற கேள்விக்கு 'ஜந்மாத்யஸ்ய யத:' என்கிற ஸூத்ரத்தால் ஜந்ம ஸ்திதி லயம் எங்கிருந்து உண்டாகிறதோ அது ப்ரஹ்மம் என்றார். அந்த ஜந்ம ஸ்திதி லயத்துக்குக் காரணமானவர் யார் என்று ஸிம்ஹாவலோகந ந்யாயத்தால் மூன்றும் அத்யாயம் மூன்றும் பாதத்தில் 'ஸர்வோபேதா ச தத்தர்ஶநாத்' என்கிற ஸூத்ரத்தால் அவன் ஸ்ரீமந் நாராயணனென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது.

இரண்டாவது அத்யாயத்துக்கு அவிரோதாத்யாய மென்று பெயர். இதில் 'ஸ்ம்ருத்யநவகாஶதோஷப்ரஸங்க:' என்றாரம்பித்து 'உத்பத்த்யஸம்பவாத்' என்கிற ஸூத்ரம் வரை முக்யமாக உள்ள அநேக மதங்களையும் தச்சாயாநுஸாரி யான பக்ஷங்களையும், ஸாத்யமான எல்லா விவாதங்களையும் எடுத்து மறுத்துத் தம் பக்ஷத்தை ஸ்திரப்படுத்தியிருக்கிறார் ஸூத்ரக்காரர். ஆதலால் ஸ்வபக்ஷ ரக்ஷணத்தாலும் பரபக்ஷ நிராகரணத்தாலும் தமது பக்ஷத்தை ஸ்தூணாநிகநந ந்யாயத்தால் ஸ்தாபித்திருப்பதால் இந்த வைதிக மதந்தான் ப்ரஹ்மத்தை யறிய ப்ரமாணம். இதிலும் ஶாஸ்த்ரம் 100-க்கு 90 அம்ஶத்தை ப்ரத்யக்ஷத்தில் சரியாக நிரூபித்துப் பாக்கியுள்ள 10-அம்ஶம் (அப்ரத்யக்ஷமான ப்ரஹ்ம விஷயத்தைச்) சொல்லுமிடத்தில் 'ஶ்ருதேஸ்து ஶப்தமூலத்வாத்' என்று விதித்தால், நாம் அதை அப்படியே ஏற்கவேணுமே யொழிய, அதற்குக் காரணம் கேட்கக் கூடாது. இந்த வேதத்தை ப்ரமாணமாகவுடைய ப்ரஹ்ம ஸூத்ரத்துக்குப் பாஷ்யம் எழுதினவர்கள் அறுவர்.

" வேதவ்யாஸமஹர்ஷிணா விரசிதம் யத் ப்ரஹ்மஸூத்ராத்மகம்
தத்வ்யாக்யாம் விவிதாஸு வர்ணிதவதாம் தாத்பர்யவிஜ்ஞாஸு ஷட் ।
தேஷ்வேவ யாதவபாஸ்கரௌ ப்ருதுஜுஷௌ ஶ்ரீஶங்கராசார்யக:
மத்வார்யோ யதிராஜலக்ஷ்மணமுநி: ஶ்ரீநீலகண்டாஹ்வய: ॥ "

என்று அடியேன் பரமாசார்யன் புதுக்கோட்டை தாநாதிகாரி காளி வங்கீபுரம் வித்வான் ஸ்ரீ. உப. ரங்காசார்ய ஸ்வாமியால் 'அதிகரணார்த்த ஸங்க்ரஹம்' என்கிற ஸ்ரீ கோஶத்தில் ஸாதிக்கப்பட்டது. யாதவர், பாஸ்கரர், ஸ்ரீ ஶங்கராசார்யர், ஸ்ரீ ராமாநுஜாசார்யர், ஸ்ரீ மத்வாசார்யர், ஸ்ரீ நீலகண்டர், இந்த ஆறு பேர்களும் பாஷ்யம் எழுதியதில், ஶங்கர ராமாநுஜ மத்வ மதங்கள் தத்ஸமயம் ப்ரபலமாக இருக்கின்றன. இந்த ஸபையில் நடந்த விவாதத்தில் அத்வைத பக்ஷத்தையும் விஶிஷ்டாத்வைத பக்ஷத்தையும் மஹாராஜா விவாதம் செய்யச் சொன்னதில், பலர் விவாதத்தின் முடிவாக 'ப்ரஹ்மம் ஸகுணமானது; அகில ஹேய ப்ரத்யநீக கல்யாணைகதாநம்' என்று ஸித்தாந்த மாயிற்று. ஸூத்ரங்களும் இதற்கு அநுகுணமாகத்தான் இருக்கின்றன. இதையே அடியேன் ஸ்வாமி, வித்வந் மண்டல மண்டந ஸ்ரீ. உப. ரங்காசார்ய ஸ்வாமி ஸாதித்த விஶேஷ க்ரந்தங்களில் ஒன்றான மதத்ரய ஸார ஸங்க்ரஹத்தில் பின் வரும் ச்லோகத்தால் ஸாதித்திருக்கிறார்.

ஸபையோர்களே! இவ்வளவு அழகான ப்ரஹ்மாநுபவம் ஏற்படுவதற்கு மந்தமதிகளான நம்போன்றவர்களுக்கு ப்ரபத்தி யென்னும் ஸுலபமான வழியை ஆசார்யர்கள் கண்டுபிடித்து, 'ப்ரபந்நாநாம் ந ஶ்ருதி ஸம்ஸாரிணோ நிஜவஶம்' என்றும் சொல்லியிருப்பதால், இப்படிப்பட்ட ப்ரபந்நர்களுக்கு ஸ்ரீ வைகுண்டத்தின் கதவுகள் திறந்திருப்பதால், ப்ராரப்த கர்மாவின் முடிவின் நிரதிஶய ஸுகத்தை யடைய ஆசார்யர்களுடைய பாதாரவிந்தங்களைத் தழுவி இஹபர ஸுகங்களை அடைவீர்களாக.

“ [illegible] ।
[illegible] ॥ ”

என்று அடியேன் ஸ்வாமியால் அதிகரணார்த்த ஸங்க்ரஹத்தில் ஸாதிக்கப்பட்ட ச்லோகத்துடன் இந்த லேகத்தை முடித்துக்கொள்ளுகிறேன்.

“ [illegible] ।
[illegible] ॥

‘ [illegible] ।
[illegible] ॥ ’

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீமத் கருடபுரம் ஸ்வாமி ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹா தேசிகனின் ஐந்தாவது வார்ஷிக ஆராதந மஹோத்ஸவம்

ஷை ஸம்வத்ஸராராதநம், நிகழும் விக்ருதி ஞு சித்திரை மீ 17உ (29—4—50) சனிக்கிழமை ஆரம்பித்து, ஸ்ரீ வேதபாராயணம், திவ்ய ப்ரபந்த ஸேவை முதலியவைகளுடன் ஐந்து நாள் மஹோத்ஸவமும், ஐந்தாவது நாளாகிய 21-ம் தேதி (3—5—50) புதன் கிழமை யன்று, சாத்துமறை, ஸம்பாவனை, ஸ்ரீ பாதுகா தீர்த்த விநியோகங்களுடன், ஸ்ரீ மதுராந்தகம் தேரடித் தெருவில் ஸ்ரீமத் கருடபுரம் ஸ்வாமியின் பூர்வாச்ரமத் திருமாளிகையில் ஸ்ரீ. உப. (சின்ன ஸ்வாமி) கருடபுரம் தி. ஈ. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியை முன்னிட்டுக்கொண்டு வெகு விமர்சையாக நடந்தேறியது. ஸ்ரீமத் ஸ்வாமி சிஷ்யர்களும் ஸ்ரீ ஸ்வாமியினிடம் ப்ரதிபந்நர்களும் பலர் ஷை ஆராதந மஹோத்ஸவத்தில் அந்வயித்து க்ருதார்த்த ராஞர்கள்.

தி. ஈ. வரததேசிக தாஸ:
தி. ஈ. திருமலே தாஸ:
(ஸ்ரீமத் ஸ்வாமி குமாரர்கள்)

* * * * * * *

ஸ்ரீ பாஷ்யகாரர் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

ராமநாதபுரம் ஜில்லா தேவக்கோட்டை நகரம் அக்ரஹாரத்தில் அட்வொகேட் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி திருமாளிகையில் ஏற்கெனவே நடந்துவருவதுபோல் நாளது விக்ருதி ஞு. சித்திரை மீ. 9உ யிலும் ஸ்ரீ பகவத் ராமாநுஜனுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம் ஷை ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி முதலிய ஸ்ரீவைஷ்ணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, 4 திநங்களில் வெகு விமர்சையாக நடந்தேறியது. தினந்தோறும் காலையிலும் மத்யாந்ஹத்திலும் ஷை அக்ரஹார வாஸியான ஸ்ரீ. உப. திருமலாசாரிய ஸ்வாமி முதலான ஸ்ரீ வைஷ்ணவர்கள் அநேகம் பெயர்களினால் வேத பாராயணம் திவ்ய ப்ரபந்தங்கள் ஸ்ரீ பாஷ்யம் முதலிய க்ரந்தங்களுடைய பாராயணமும் சாற்றுமறை கோஷ்டி விநியோகாதிகளும் நடத்தப்பட்டன. முதல் நாள் ராத்ரி 8-மணிக்குமேல் ஸ்ரீரங்கம் எம்பார் ஸ்ரீ. உப. விஜயராவாசார்ய ஸ்வாமியினால் ‘ஆண்டாள் திருக்கல்யாண’ கதாகாலக்ஷேபம், ஸங்கீதம் வாத்யம் முதலியவற்றோடு 12-மணி வரையில் எல்லோரும் கேட்டு

விசேஷமாக ஆனந்திக்கும்படி நடத்தப்பட்டது. மறுதினம் ராத்ரி 8-மணிக்கு, ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான் ஸ்ரீ தேசிகதர்சந விஜயத்வஜர் புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியினால் 'மநுஷ்ய ஜந்மத்தின் ப்ரயோஜநம்' என்கிற விஷயம் 'வரீக்ஷ்யொகாநு' என்கிற முண்டகோபநிஷத்தின் மூலமாக ச்ருதி ஸ்ம்ருதி கீதை பாரதம் ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு மிகவும் விஸ்தாரமாக நெடுநேரம் உபந்யஸிக்கப்பட்டது. தேவக்கோட்டை ஸப்ஜட்ஜ் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸய்யங்கார் முதலான உத்யோகஸ்தர்களும், அநேகம் வக்கீல்களும், வைதிக வித்வான்களும், ஸ்த்ரீ ஜனங்களும் கேட்டு மிகவும ஸந்தோஷித்தார்கள்.

மூன்றாவது நாள் மாலை 6 மணிக்குப் புதுக்கோட்டை காலேஜ் உபாத்யாயர் சறுக்கை ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமியினாலும், தேவக்கோட்டை ஸ்ரீ. உப. வித்வான் திருமலாசார்ய ஸ்வாமியினாலும், ஸ்ரீ பாஷ்யகாரருடைய குணதிசயங்களும் ஸ்ரீ ஸ்வாமி இவ்வுலகத்திற்குச் செய்திருக்கும் உபகாரங்களும் விஸ்தாரமாக 8-மணி வரையில் மிகவும் அழகாக உபந்யஸிக்கப்பட்டன. 8-மணிக்குமேல் ஸ்ரீ. உப. புத்தன் கோட்டகம் ஸ்வாமியினால் 'விசிஷ்டாத்வைத மஹிமை' என்கிற விஷயமானது, இந்த மதம் மிகவும் உலகாநுபவத்தை அநுஸரித்திருக்கிறது முதலான 7-காரணங்களினால் மற்றை மதங்களி லிருக்கும் பற்பல குறைகளை அந்தந்த பாஷ்யகாரர்களுடைய வசநங்களை வ்யக்தமாக எடுத்துச் சொல்லியும், அப்படிப்பட்ட குறைகள் ஸ்ரீ பகவத் ராமாநுஜ மதத்தில் இல்லாதிருப்பதையும் வ்யக்தமாகக் காட்டி, விசிஷ்டாத்வைதத்தின் பெருமை ச்ருதி ஸ்ம்ருதி புராணம் பாரதாதிகளான ப்ரமாணங்களுக்குப் பொருந்தியிருப்பதும் விஸ்தாரமாக உபந்யஸிக்கப்பட்டன. அன்று ஷை விஷயம் சொல்லப்பட்டு முடியாமையினால் மறு தினமும் இரவில் 8-மணி முதல் 11-மணி வரையில் உபந்யஸிக்கப்பட்டது. ஷை விஷயத்தை இரண்டு தினங்களிலும் ஷை ஸப்ஜட்ஜ் ஸ்வாமியும் அநேகம் வக்கீல்களும் கேட்டு மிகவும் ஸந்தோஷித்து ஷை ஸ்வாமியின் உபந்யாஸத்தை மிகவும் கொண்டாடினதோடு, இப்படிப்பட்ட சாஸ்த்ரார்த்தங்களை நாமெல்லோரும் கேட்டு ஆநந்திப்பதற்குக் காரணம், ஷை திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை நடத்திவைக்கிற அட்வொகெட் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸய்யங்காருடைய ஆசார்ய பக்திதா னென்று அவரையும் ச்லாகித்தார்கள்.

N. V. வாஸுதேவாசார்யர்.

* * * * * * *

ஸ்ரீ கல்யாணபுரம் அழகியசிங்கர் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

நிகழும் விக்ருதி ஸ்ரீ சித்திரைமீ 12உ (24-4-50) திங்கட்கிழமை ஸ்ரீமதஹோபில மடம் 24-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ பாராங்குச யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம், 'ம-ஷ-ஹணாஂஜ நக்ஷெ-உ வஂஜயெசு' என்றபடி ஷை ஸ்ரீ அழகிய சிங்கர் திருவம்சயரும் ஆஸ்திகாக்ரேஸரருமான ஸ்ரீ உப. சக்ரவர்த்தியாசார்யரால் பூர்வம் ஸ்ரீ அழகிய சிங்கர் வஸித்த தமது திருமாளிகையில் அதிவிமர்சையாய்க் கொண்டாடப்பட்டது. உத்ஸவம் 18—4—50 செவ்வாயன்று உபக்ரமிக்கப்பட்டு, ப்ராதஸ்ஸாயம் ஸம்பூர்ணமாகத் திவ்ய ப்ரபந்த ஸ்ரீ தேசிக ப்ரபந்தங்களும் ஸமக்ர வேத பாராயணம் க்ரந்த காலக்ஷேபாதிகளும் திவ்ய ததீயாராதநங்களுடன் நடந்துவந்து, திருநக்ஷத்ரத்தன்று காலை திருவாராதநாநந்தரம் திவ்யகோஷத்துடன் விஸ்தர சாத்துமறையும் அருளப்பாட்டுடன் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு மரியாதைகளாகி, தீர்த்தம் சடாரி முதலியவை ஆயின. ததநந்தரம், ஷட்ரஸோபேதமான ததியாராதநம் நடந்தது. ஷை உத்ஸவத்தை ஸ்ரீ. உப. சக்ரவர்த்தியாசாரியரும் தத்ப்ராதாக்காளான ஸ்ரீ. உப. சாரங்காசாரியர், கநிஷ்டரும், எல்லை கடந்த பாகவதாசார்ய பக்தரும், அவிச்

சிங்க அக்நி கார்யரும், நித்யாநுஷ்டாந பகவதாராதநாதிகளில் அதிரக்தருமான ஸ்ரீ. உப. C. V. ராஜகோபாலாசாரியர் (ஸ்ரீரங்கம்) இவர்கள் ஐகமத்யத்துடனும் ஸாவதாநத்துடனும் நடத்தியது ஆச்சர்யமாயிருந்தது. மாலையில் ஸ்ரீ. உப. மதுராந்தகம் வித்வான் வீரராகவாசார்ய ஸ்வாமி விசேஷித்து ஆசார்ய வைபவத்தையும் ந்யாஸவிம்சதியில் கூறிய ஆசார்ய லக்ஷணங்கள் ஸ்ரீ கல்யாணபுரம் அழகிய சிங்கருக்கு ப்ரதிபதம் பொருந்துமென்பது கேள்வி யென்றும், அதற்கு நிதர்சநமாகத்தற்போதும் அந்த பரம்பரையில் ஸ்ரீ. உப. சக்ரவர்த்தியாசார்ய ப்ரப்ருதிகள் இருப்பதை ச்லாகித்தும் 'இன்பத்தில்' என்ற பாசுர ரீதியாக ஸர்வவித பந்துவாகப் பற்றிய துன்பற்ற மதுரகவியின் தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட் குற்றது என்பதை விளக்கி, அது ஸர்வ ஸுலபோபாதேயம் என்றும் உபந்யஸித்து, உத்ஸவம் நடாத்திய ப்ராதாக்களுடைய பரிபக்வ தசையையும் கொண்டாடினர். அதன் பின் கைங்கர்யங்களில் அநந்ய ப்ரயோஜநபரர்களாய் அந்வயித்த ஸ்வாமிகளுக்கு ப்ரேமையுடன் உசிதமான ஸம்பாவனைகளும், சந்தன தாம்பூலாதிகளுமாகி, உத்ஸவம் பூர்த்தி யடைந்தது.

ஸ்ரீ கல்யாணபுரம் அழகிய சிங்கர் கல்யாணபுரத்தில், ஜாயமாந கடாக்ஷலப்த ஸாத்விக புத்தி யுக்தராய் ஆபால்யமாக ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பந்நரா யெழுந்தருளியிருந்தால் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திவ்ய ஸந்நிதி நிர்வாஹத்தை ஏற்க நேர்ந்து, 24-வது பட்டத்தில் எழுந்தருளி, கி. பி. 1764 முதல் 1776 வரை 12-ஸம்வத்ஸரத்துக்குமேல் விசேஷ காலக்ஷேபாதிசயங்களுடனும் யாத்ரோத்ஸவங்களுடனும் எழுந்தருளியிருந்து, சில க்ரந்த நிர்மாணங்களும் செய்தருளினர். இந்த அழகிய சிங்கரின் மஹத்வாதி குணங்களில் ஈடுபட்டு, அக்காலத்தில், கத்தவால் ஸமஸ்தாநாதிபதி ஸ்ரீ ஸோமபூபாலன் இவர் திருவடிகளில் ஸர்வஸ்வதாந பூர்வமாக அந்வயித்து அநேக ஸ்வர்ண ரத்ந திருவாபரணங்களுடனும் வெள்ளி மண்டபம் முதலியவைகளை ஸமர்ப்பித்து, ஸ்ரீ ந்ருஸிம்ஹன் திருவராதநத்துக்குச் சில கிராமங்களையும் விட்டு க்ருதார்த்தரானர். அதுமுதல் அவர்கள் ஸ்ரீ ஸந்நிதியில் ஈடுபட்டுள்ளார்கள். இவ்வுத்ஸவ கைங்கர்யங்கள் 'வர்த்ததாம் அபிவர்த்ததாம்' என்று மேன்மேலும் அபிவ்ருத்தி யடையவேணு மென ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ப்ரார்த்திக்கிறேன்.

T. S. சேஷாத்ரி தாஸன்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஏஜென்ஸி நிபந்தனைகள்.

ஒரு தடவையில் 10 பிரதிகளுக்குக் குறையாமல் எடுத்துக் கொள்ளுபவர்களுக்கு 100-க்கு 20 வீதம் கமிஷன் கொடுக்கப்படும். ஏஜண்டுகள் காபி 1-க்கு 4 அணு வீதம் டிபாஸிட் கட்ட வேண்டும். புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பதற்கும் கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு நேரில் ஆபீஸுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

ஸம்பாதகர்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்

[8-ம் ஸம். 11-ம் ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

64 [illegible]

65 [illegible]

66 [illegible]

67 [illegible]

68 [illegible]

69 [illegible]

70 [illegible]

71 [illegible]

72 [illegible]

73 [illegible]

74 [illegible]

75 [illegible]

76 [illegible] यतिनां वरेण्यः ।
[illegible] ॥

77 [illegible]
[illegible] ।
[illegible] ॥

78 [illegible]
[illegible] ।
[illegible] ॥

79 [illegible] ।
[illegible] ॥

80 [illegible] ।
[illegible] ॥

81 [illegible] ।
[illegible]

82 इत्थं [illegible] ।
[illegible] ॥

83 [illegible] ।
[illegible] ([illegible]) [illegible]
[illegible] ॥

84 इति [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

इति श्री[illegible] ॥

शुभमस्तु ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்

யோऽநந்த: ப்ருதிவ்யாஸஹ வாஸு ஶிரோம் ப்ரஹ்லாத்வாம்
ஸஞ்ஜீவயந்த்யவிஶ்ரம்ஸக்ரியஸ்ஸவ்யாஹ்ந ।
சந்த்ராம்ஶு ஹஸ்தாரணஶ்ரவணஸுதாரீநு
ப்ராணாஸௌ ஸமவதே பாஷ்யகாராய தஸ்மை ॥

"ஸ்ரீ க்ருஷ்ண" என்ற பெயர் பூண்ட ஆங்கில மாதாந்தரப் பத்திரிகையின் முதல் ஸஞ்சிகை வரப்பெற்றோம். பெயருக்கேற்ப இப்பத்திரிகை ஓரிடத்திலே தோன்றி ஓரிடத்திலே வளர்ந்துவருவதாகத் தெரிகிறது.

"ஸ்ரீ கிருஷ்ண" பத்திரிகை

பம்பாயின் ஒரு பகுதியான மாதுங்காவில் அது பிறந்தது. அங்கே நிறுவப்பட்டு மத ஸம்பந்தமான பல அரும் பெரும் தொண்டுகளாற்றிவரும் ஸ்ரீ க்ருஷ்ண ஸபையாரின் ஆதரவில் இப்பத்திரிகை நடத்தப்படுகிறது. நமது சென்னையைச்சேர்ந்த புதுக்கோட்டையில் அச்சிடப்பட்டு வெளிவருகிறது. பல அருமையான நம் ஸம்ப்ரதாய நூல்களைப் பதிப்பித்துவரும் ஸ்ரீமான் உ. வே. ஏ. ஸ்ரீநிவாஸராகவன் அவர்கள் இதற்கு முக்ய பத்ராதிபரெனவும் தெரிகிறது.

முதல் ஸஞ்சிகையில் பல ப்ரமுகர்களுடைய வாழ்த்துக்களும் பல ப்ரபல எழுத்தாளர்களுடைய அழகிய உயரிய வ்யாஸங்களும் திகழ்கின்றன. தமிழ் நாட்டிலிருந்து வ்யாஸங்கள் புனைந்தவர்களுள் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீனிவாஸய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீமான் ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி ஸ்ரீமான் ஆர். ஸ்ரீனிவாஸாசார்ய ஸ்வாமி ஸ்ரீமான் தி. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீமான் கே. பாஷ்யமையங்கார் ஸ்வாமி இவர்களின் பெயர்கள் குறிப்பிடத்தக்கன. மதப் பற்றும் தெய்வீக உணர்ச்சியும் நிரம்பிய பல வ்யாஸங்கள் அழகாக எழுதப் பட்டு படிப்பவர்களின் உள்ளங்களைக் கவரக்கூடினவாயுள்ளன.

இப்பத்திரிகைக்கும் இதன் பெயர்பூண்ட அச்சபைக்கும் மூலபூதரான ஸ்ரீமான் ஏ. ஸ்ரீரங்கராஜ அய்யங்கார் ஸ்வாமி (**Sriman A. S. Iyengar Commissioner for Labour, Bombay**) யினுடைய பரிச்ரமத்தால் துவக்கப்பட்ட இந்தஇரண்டும் ஸர்வசரண்யன் திருவருளால் வெகு விரைவில் தெய்வீகத் தொண்டுக்குப் பாடுபட்டுவரும் இம்மாதிரி பத்ரிகைகளுக்கும் ஸபைகளுக்கும் முன்னணியில் நிற்குமென்பதில் ஐயமிராது. அந்த ஸ்வாமியினுடைய அறிவும்

ஆஸ்திகமும், உணர்ச்சியும், ஊக்கமும் அனைவரும் அறிந்தனவே. பகவத் பக்தியும் ஆசார்ய பக்தியும் நிரம்பிய இப்பெரியார் ஸமீபத்தில் ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனது ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தை ஸம்ஸ்கிருதத்திலேயே பம்பாயில் நடத்திவைத்தார். இதுவரை அவர் மேற்கொண்டுள்ள கைங்கர்யங்களெல்லாம் இனிதாகவும் சிறப்பாகவும் நிறைவேறி வருவனபோலவே இப்பத்ரிகையும் ஆங்கிலம் எங்கெங்கெல்லாம் நடையாடுகின்றதோ அங்கங்கெல்லாம் நமது அரும் பெரும் ஸித்தாந்தத்தின் அழகான அர்த்தங்களைப் பரவச்செய்து விளங்குமாறு ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மா அருள்புரிவானென்று நம்புகிறோம். *

* * * *

ஓர் விண்ணப்பம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் மேல்விலாசத்தில் ஒட்டப்படும் நமது சந்தாதாரர்களின் பெயர்களையும் விலாசங்களையும் புதிதாக அச்சிட ஏற்பாடு நடந்து வருகிறது. க்ருபைசெய்து சந்தாதாரர்கள் தங்கள் சந்தா நம்பர், சரியான பெயர், விலாசம், இவைகளைத் தெளிவாக (ஸௌகர்யப்பட்டால் இங்கிலீஷில் Block Letterகளில்) எழுதி அனுப்பவேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

நமது சந்தாதாரர்கள் அனுப்பும் சந்தாத் தொகைக்கு இதுவரையில் அவர்களுக்குத் தபாலில் தனியாக ரசீது அனுப்பப்பட்டு வருவதுடன் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸஞ்சிகையிலும் சந்தா வஸூல் விவரம் வெளியிடப்பட்டும் வருகிறது. பெரும்பாலும் சந்தாத் தொகைகள் மணியார்டர் மூலமே வருவதால் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸில் கையெழுத்திடப்பட்ட அந்த மணியார்டர் ரசீதும் சந்தாதாரர்களுக்குக் கிடைத்து வருகிறது. இம்மாதிரி ஒரே தொகைக்கு மூன்று ஆதாரங்கள் (வவுச்சர்கள்) மிகவும் அவச்யமானவையா என்று ஸந்தேஹிக்கிறோம். தற்போது இருக்கும் காகித விலை உயர்வு, அதிகக் கூலி முதலியவைகளை உத்தேசித்தும் வீணான அதிகச் செலவைத் தவிர்க்கவும் இனி ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸிலிருந்து தனியாக ரசீதுகளைத் தபாலில் அனுப்புவது நிறுத்தப்படும். சந்தா வரவு விவரம் மட்டும் முன்போல் பிரதி மாதமும் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவில் பிரசுரிக்கப்படும். தங்கள் மணியார்டர் ரசீதுடன் சந்தா தாரர்கள் அதைச் சரி பார்த்துக் கொள்ளலாம். நேரில் கொடுக்கப்படும் தொகைகளுக்கு மட்டும் ஆபீஸிலிருந்து ரசீது கொடுக்கப்படும். இந்த ஏற்பாட்டை நமது சந்தாதாரர்கள் அங்கீகரிக்க வேண்டுமென வேண்டுகிறோம்.

---

* இப்பத்ரிகைக்கு வருஷச் சந்தா ரூ. 15. ஆசிரியர், ஸ்ரீ க்ருஷ்ண, III, கீழ வீதி, புதுக்கோட்டை, என்ற விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

1992?0

ஆஸ்திகர்களுக்கு அறிவிப்பு

ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபா என்னும் பெயர்கொண்ட ஸபை
சென்னையில் 1947-வருஷம் அக்டோபர் மாதத்தில்
ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின்
தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது.

இந்த ஸபையின் மூலமாகத் தமிழ் லிபியிலும், தெலுங்கு லிபியிலும்
நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்க ளெல்லாம் மிகவும் அழகிய முறையில்
அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.

"ஸ்ரீராமாநுஜன்"

என்ற பெயரால் மாதப் பத்ரிகையும் தமிழ் தெலுங்கு உபய பாஷைகளிலும்
தனித்தனி நடத்தப்பட்டு வருகின்றது.

ஷை ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையில்

மொத்தமாக 250 ரூபாய் செலுத்துகிறவர்கள் பேட்ரன்கள்.

100 ரூபாய் செலுத்துகிறவர்கள் ஜீவிய சந்தாதாரர்கள்.

வருஷந்தோறும் (போஸ்டேஜ் உள்பட) 15 ரூபாய் சந்தா செலுத்துமவர்கள்
ஆர்டினரி மெம்பர்கள்.

ஆக இம்மூன்று வகுப்பிலும் சேர்ந்தவர்கள் மாதப் பத்ரிகைக்காகத்
தனிப்பட்ட சந்தா செலுத்தவேண்டிய தில்லை.
மாதப் பத்ரிகை மாத்ரம் விரும்புமவர்களுக்கு

தமிழ்ப் பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 4.

தெலுங்கு பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 5.

மற்றும் இது ஸம்பந்தமான விவரங்களுக்கு விசேஷ விளம்பரம் தருவித்துப் பார்க்க.
கடிதப் போக்கு வரத்துகளுக்கும் மணியார்டர் அனுப்புவதற்கும் விலாஸம்:—

P. B. அண்ணங்கராசாரியர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

க்ரந்தமாலா ஆபீஸ் பதிப்புகளுக்கு விரிவான காட்லாக் வரவழைத்துப் பார்க்க. உடையவர், நம்பிள்ளை, தேசிகன், மணவாளமாமுனிகள் முதலான பூருவாசாரியர்கள் அருளிச்செய்த ஸகல க்ரந்தங்களும், அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் இயற்றிய நாலாயிர திவ்யப் பிரபந்த வியாக்யானங்கள், ஸ்ரீ வசநபூஷண ஆசார்ய ஹ்ருதயாதி ரஹஸ்யவியாக்கியானங்கள், ஸகல ஸ்தோத்ரபாட வியாக்கியானங்கள் மற்றும் பல ஸம்ப்ரதாய நூல்கள், பலவகை உபந்யாஸ நூல்கள், சரித்திர நூல்கள் இங்கே கிடைக்கும்.

மானேஜர்,

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

Regd. No. M. 4437.

ஸ்ரீ அஹோபில மடம்

ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்

இக்கலாசாலையில் சென்னை யூனிவர்ஸிடியாரால் நடத்தப்படும் ந்யாய வியாகரண சிரோமணிப் பரீக்ஷைகளுக்கு வித்யார்த்திகளுக்கு பாடப்ரவசனம் செய்யப்படுகிறது. சென்னை சர்க்காரால் நடத்தப்படும் பிரவேசப் (Entrance) பரீக்ஷையில் தேர்ச்சிபெற்ற மாணவர்களே சிரோமணி 1-வது வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். சிரோமணி பரீக்ஷைப் பாடங்கள் 4-வருஷங்களில் போதிக்கப் படுகின்றன. இரண்டாவது வருஷ முடிவில் வித்யார்த்திகள் பூர்வாங்கப் (பிரெலிமினரி) பரீக்ஷைக்கு அனுப்பப்படுவார்கள். 4-வது வருஷமுடிவில் கடைசி (பைனல்) பரீக்ஷைக்கு அனுப்பப்படுவார்கள்.

சென்னை சர்க்கார் நடத்தும் பிரவேசப்பரீக்ஷைக்கும் வித்யார்த்திகளுக்கு பாடப்ரவசனம் செய்யப்படுகிறது. ஷி வகுப்பிலும் அதற்குக் கீழ்ப்பட்ட வகுப்புகளிலும் வித்யார்த்திகள் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.

யஜுர்வேதம், திவ்யப்ரபந்தம் இவைகளைத் தனித்தனியே அத்யயனம் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வித்யார்த்திகளுக்கு போஜனாதி ஸௌகரியங்களும் இலவசமாகச் செய்து கொடுக்கப்படும்.

கலாசாலையில் சேரவிரும்பும் மாணவர்கள் (1) தங்கள் பெயர் (2) பிறந்ததேதி & வயது (3) தகப்பனார் பெயர் (4) தற்போதுள்ள யோக்யதாம்சம் (5) ஏற்கனவே தேறியபரீக்ஷை விவரங்கள் (6) சேர விரும்பும் வகுப்பு முதலியவைகளையும் தங்கள் முழுவிலாசத்தையும் விவரமாக எழுதி **10—6—1950**-க்குள் கலாசாலை ப்ரின்ஸ்பாலுக்கு மனுச் செய்து கொள்ளவேண்டும். நற்சாக்ஷி பத்திரங்கள் அல்லது சர்டிபிகேட்டுகள் ஏதாவது இருந்தால் அவைகளையோ அல்லது அவைகளின் சரியான நகலையோ மனுவுடன் அனுப்ப வேண்டும். சேரவிரும்பும் வித்யார்த்திகள் நேரே ஆஜராகி வாக்குப் பரீக்ஷை கொடுக்கவும் தயாராயிருக்கவேண்டும். கலாசாலையில் சேர்த்துக்கொள்ளும் விஷயத்தில் கலாசாலாதிகாரிகளின் தீர்ப்பே முடிவானது. மற்ற விவரங்களுக்கு கலாசாலை ப்ரின்ஸ்பாலுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மனு அனுப்பவேண்டிய விலாசம்:—

பிரின்ஸ்பால்,

ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை,

மதுராந்தகம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14. Sannidhi Street L. Kancheepuram. Edited and Published by P. S. Srinivasa Desikachariar, No. 2, Audiappa Mudali Street, Purasawakkam, Vepery, Madras - 7.